Registered as a Newspaper

# உதயன்

விலை ரூ. 50

பக்கங்கள் 12

சுடர் : 38
கதிர் : 23

திங்கட்கிழமை 19 டிசெம்பர் 2022

மார்கழி 04 ஆம் நாள் – வள்ளுவர் ஆண்டு 2053

ஐ.நா.வின்

## நல்லிணக்கம், பொறுப்புக்கூறலுக்கான நிதி உதவியை நிராகரித்தது இலங்கை

கொழும்பு, டிசெம்பர் 19

இலங்கையில் நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகளை மேம்படுத்துவதற்கான, மனித உரிமைகள் பேரவையின் தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவதற்கு, ஐக்கிய நாடுகள் சபையால் 1.2 பில்லியன் ரூபா ஒதுக்கப்படுவதை இலங்கை அரசாங்கம் எதிர்ப்பதுடன், அந்தத் தொகையை திட்டவட்டமாக நிராகரித்துள்ளது. »11

### கடும் மழைக்கான வாய்ப்பு குறைவு!!

யாழ்., டிசெ. 19

வடக்கு மாகாணத்துக்கு இன்றும் நாளையும் கடும் மழை பெய்வதற்கான வாய்ப்புக்கள் குறைவாகவே காணப்படுவதாக வானிலை எதிர்வு கூறல்களில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மழை மேகங்கள் இன்றும் நாளையும் வடக்கில் காணப்பட்டாலும், தூறலுடன் கூடிய »11

### ஆர்ஜென்ரீனா உலகச்சம்பியன்

கட்டார், டிசெ.19

கட்டாரில் நடைபெற்ற உலகக்கிண்ண கால்பந்தாட்டப் இறுதிப் போட்டியில் பிரான்ஸ் அணியை வீழ்த்தி ஆர்ஜென்ரீனா அணி சம்பியனானது.

நேற்றிரவு நடைபெற்ற இந்த இறுதிப்போட்டியில் முதல் பாதி ஆட்டத்தில் மெஸ்ஸி, டீ மரியா ஆகியோரின் அபார ஆட்டத்தால் 2:0 என்ற கோல் கணக்கில் ஆர்ஜென்ரீனா அணியின்கையே ஓங்கியிருந்தது. ஆனால், இரண் »09



மியான்மரில் இருந்து

### படகில் வந்த ஏதிலிகளில் இருவர் மருத்துவமனையில்

யாழ்ப்பாணம், டிசெ. 19

வடமராட்சி கடற்பரப்பில் தத்தளித்த படகிலிருந்து மீட்கப்பட்ட 104 பேரில் இருவர் தெல்லிப்பழை ஆதார மருத்துவமனையில் நேற்றுச் சேர்க்கப்பட்டுள்ளனர். »11

## 150 பேருடன் பயணித்த படகு கடலில் மூழ்கியதா?

### காங்கேசனில் தங்க வைக்கப்பட்டுள்ள ரோஹிங்கிய ஏதிலிகள் தகவல்

யாழ்ப்பாணம், டிசெ. 19

மியான்மரின் ரோஹிங்கிய ஏதிலிகளுடன் இந்தோனேஷியா நோக்கி 150 பேருடன் பயணித்துக்கொண்டிருந்த படகு ஒன்று கடலில் மூழ்கியதாக, காங்கேசன்துறையில் தங்க வைக்கப்பட்டுள்ள ரோஹிங்கிய ஏதிலிகள் தகவல் வெளியிட்டுள்ளனர்.

வடமராட்சி கடற்பரப்பில் ரோஹிங்கிய ஏதிலிகள் பயணித்த படகு தத்தளித்துக் கொண்டிருந்த சமயத்தில் உதவி கோரப்பட்டது. அதற்கு அமைவாக »11

### நீர்நிலைக்கு விஷம் 15 மாடுகள் சாவு!

வவுனியாவில் பாதகச் செயல்

வவுனியா, டிசெ. 19

வவுனியா, பூம்புகார் கல்மடுபகுதியில் மாடுகள் அருந்தும் நீரில் நஞ்சு கலக்கப்பட்டமையால் 15 மாடுகள் பரிதாபமாக சாவடைந்துள்ளதுடன், பல மாடுகள் உயிருக்குப் »11

### பல்கலைக்கழகப் பதிவு இன்று முதல் ஆரம்பம்

கொழும்பு, டிசெ. 19

2021 க.பொ.த. (உ/த) பரீட்சைகளுக்குப் பின்னர் பல்கலைக்கழக நுழைவுக்குத் தகுதிபெறும் மாணவர்கள் இன்று முதல், அவர்கள் தேர்ந்தெடுத்த பல்கலைக்கழகங்களில் பதிவு செய்யலாமென பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவின் தலைவர் தெரிவித்துள்ளார்.

தகுதி பெறும் மாணவர்களுக்கு இன்று குறுஞ் செய்தி அல்லது மின்னஞ்சல் மூலம் அறிவிக்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அறிவிப்பு கிடைக்கப்பெற்ற பின்னர் »11

### வெதுப்பக உற்பத்திகளின் விலையைக் குறைப்பதா?

யாழில் இன்று ஆராய்வு

யாழ்ப்பாணம், டிசெ. 19

கோதுமை மாவின் விலை குறைக்கப்பட்டுள்ளமையால் யாழ்ப்பாண மாவட்டத்தில் வெதுப்பக உற்பத்திப்பொருள்களின் விலை குறைப்புத் தொடர்பில் இன்று ஆராயப்படவுள்ளது. »12



தமிழ் அரசுக் கட்சியின்

### பவள விழாவுக்கான ஆரம்ப நிகழ்வு நேற்று

கிளிநொச்சி, டிசெ. 19

இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் 75ஆவது ஆண்டு பவள விழாவுக்கான ஆரம்ப நிகழ்வு நேற்று ஞாயிற்றுக்கிழமை கரைச்சிப் பிரதேசசபை »11

## 45 ஆயிரம் டொலர் பெறுமதியான பனங்கள் வெளிநாட்டுக்கு ஏற்றுமதி

### புதிய அத்தியாயம் படைக்கிறது பனை அபிவிருத்திச் சபை

யாழ்ப்பாணம், டிசெ. 19

பனை அபிவிருத்திச் சபையில் பதிவு செய்யப்பட்ட ஏற்றுமதியாளர்களால் போத்தலில் அடைக்கப்பட்ட பனங்கள் ஐரோப்பிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது.

இதனடிப்படையில் கடந்த மாதம் 29 ஆம் திகதி பிரான்ஸுக்கு சுமார் 45 ஆயிரம் அமெரிக்க டொலர் பெறுமதியான உற்பத்திகள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

மேலும் ஏற்றுமதியாளர்களால், கடந்த 14 ஆம் திகதி »11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# இனப்பிரச்சினைக்காக பலசுற்றுப் பேச்சுக்கள்!

## ஜனவரி மாதம்முதல் முன்னெடுக்கப்படும் வெளிவிவகார அமைச்சர் சப்ரி தெரிவிப்பு

கொழும்பு, டிசெ. 19

இனப்பிரச்சினைக்கான நிரந்தரமான தீர்வு குறித்து அடுத்த ஆண்டின் ஜனவரி மாதம் முதல் பல கட்டப்பேச்சுக்களை முன்னெடுப்பதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கம் தயாராகியுள்ளது என்று வெளிவிவகார அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி அலிசப்ரி தெரிவித்தார்.

சர்வகட்சி மாநாட்டின் எதிர்காலச் செயற்பாடுகள் தொடர்பில் கருத்து வெளியிடும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இனங்களுக்கிடையிலான தேசிய இனப்பிரச்சினை தொடர்பில் நீண்டகாலமான கரிசனையைக் கொண்டவராக இருக்கின்றார்.

இந்த விவகாரத்துக்கு முற்றுப்புள்ளி வைக்கவேண்டும் என்ற நோக்கம் அவருக்குப் பல தசாப்தங்களாகவே இருந்து வருகின்றது. இவ்வாறான நிலையில், தற்போது சர்வகட்சிகளின் பங்கேற்புடன் பேச்சுக்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந்தப் பேச்சுக்களை எதிர்மறையாகப் பார்ப்பவர்களும் உள்ளார்கள். அனைத்து இனக்குழுமங்களின் அரசியல் தரப்புக்களிலும் 'பிச்சைக்காரன் புண்போன்று' இந்த விடயம் நீடிக்கவேண்டும் எனக் கருதும் வன்போக்கு நிலைப்பாடுகளை உடையவர்கள் உள்ளார்கள். உண்மையிலேயே சர்வதேச நாணய நிதியத்துடனான பேச்சுக்களுக்கும் இனப்பிரச்சினை உள்ளிட்ட இதர பிரச்சினைகள் குறித்த பேச்சுக்களுக்கும் எந்தவிதமான தொடர்புகளும் இல்லை.

நாணயநிதியத்துடனான பேச்சுக்கள் தொடர்பாக பிரத்தியேகமான சந்திப்புக்களும் பேச்சுக்களும் முன்னெடுக்கப்படுகின்றன.

அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் முதல் இனப்பிரச்சினைக்கான தீர்வு தொடர்பில் பல்வேறு கட்டப் பேச்சுக்கள் முன்னெடுக்கப்படவுள்ளன. இதில் எவ்விதமான தயக்கத்தையும் அரசாங்கம் காண்பிக்கப் போவதில்லை.

உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவை அமைத்தல், கைதிகளின் விடுதலை உள்ளிட்டவற்றுக்கான அடிப்படைச் செயற்பாடுகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுவிட்டன. காணாமலாக்கப்பட்டவர்களின் உறவினர்கள் பற்றியும் கவனத்திற் கொண்டு இழப்பீடு உள்ளிட்ட நடவடிக்கைகளை வழங்குவதற்குத் தயாராகவே உள்ளோம் - என்றார். (ம)

# 13 பிளஸ் என்பது சவாலான விடயம்

கொழும்பு, டிசெ. 19

தமிழ் மக்களின் அன்றாடப் பிரச்சினைகள் உட்பட இனப்பிரச்சினைக்கான தீர்வு சம்பந்தமாக தீர்மானங்களை முன்னெடுப்பதற்காக ஆரம்பிக்கப்பட்டுள்ள சர்வகட்சி மாநாட்டின் ஊடாக 13ஆவது திருத்தத்துக்கு அப்பால் செல்வது சவாலானது விடயமாகும் என்று மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கலாநிதி பாக்கியசோதி சரவணமுத்து தெரிவித்தார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அழைப்பின் பேரில் ஆரம்பிக்கப்பட்டுள்ள சர்வகட்சி மாநாட்டில் தமிழ்க் கட்சிகளின் பங்கேற்பு தொடர்பில் இருவேறு பிரதிபலிப்புக்கள் வெளிவந்துள்ளமை தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான நோக்கத்தையும் உள்ளடக்கி சர்வகட்சி மாநாடு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. தமிழ் மக்கள் தமது பிரச்சினைகள் தொடர்பில் வெளிப்படுத்துவதற்குக் கிடைகின்ற அனைத்துச் சந்தர்ப்பங்களையும் பயன்படுத்தவேண்டும்.

அந்தவகையில், இந்த மாநாட்டில் பங்கேற்பதைத் தவறாகக் கொள்ளமுடியாது. ஆனால் இந்த மாநாட்டில் பங்கேற்பதன் ஊடாக பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்குதல், அதன் கீழ் கைதுசெய்யப்பட்டவர்களை விடுவித்தல், காணமாலாக்கப்பட்டவர்களின் உறவினர்களுக்கு நீதியைப் பெற்றுக்கொடுத்தல் உள்ளிட்ட விடயங்களுக்கான தீர்வை முழுமையாகப் பெற்றுக்கொடுப்பதற்கு அதியுச்சமாக முனையவேண்டும்.

இதனைவிடவும் குறித்த மாநாட்டில் இனப்பிரச்சினை தீர்வு சம்பந்தமாக கரிசனை கொள்ளப்பட்டு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுமாக இருந்தால் அது 13ஆவது திருத்தத்தை மையப்படுத்தியதாகவே இருக்கும்.

அதாவது, அரசமைப்பில் உள்ளவாறு 13ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துமாறே கோரமுடியும். அதற்கப்பால் சென்று அதிகாரப்பகிர்வுக்கான கோரிக்கைகள் முன்வைக்கப்படுமாக இருந்தால் அவை நடைமுறையில் சாத்தியமாகுமா? என்ற சந்தேகம் எனக்குள்ளது. ஏனென்றால், தற்போதைய அரசாங்கம் மக்கள் ஆணையை முழுமையாகப் பெறாதவொன்றாகும். அத்துடன், உறுதியான நிலைமையிலும் இல்லை - என்றார். (ம)

# உள்ளூராட்சித் தேர்தலில் களமிறங்கும் கூட்டணிகள்!

கொழும்பு, டிசெ. 19

2023ஆம் ஆண்டு இடம்பெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் பெரும்பாலான அரசியல் கட்சிகள் கூட்டணி அமைத்துப் போட்டியிடவுள்ளன. இதற்குரிய பேச்சுக்கள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

மக்கள் விடுதலை முன்னணியைத் தவிர ஏனைய அரசியல் கட்சிகள் கூட்டணியாக தேர்தலில் போட்டியிட அதிக கவனம் செலுத்தியுள்ளன.

ஸ்ரீலங்கா பெரமுன மற்றும் ஐக்கிய தேசியக் கட்சி ஒன்றிணைந்து பரந்துபட்ட அரசியல் கூட்டணியை அமைக்கத் தீர்மானித்துள்ளதாகப் பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் பஸில் ராஜபக்ச குறிப்பிட்டுள்ளார். நாட்டின் எதிர்காலத்துக்காக கொள்கை அடிப்படையில் ஐக்கிய தேசியக் கட்சியுடன் ஒன்றிணைவதில் தவறேதும் இல்லை என பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளர் சாகர காரியவசமும் தெரிவித்துள்ளார்.

இந்தக் கூட்டணியை அமைப்பது தொடர்பான நடவடிக்கைகள் தற்போது தீவிரமாக முன்னெடுக்கப்பட்டுள்ளன.

சுதந்திரக் கட்சி, இலங்கை மேலவைக் கூட்டணி மற்றும் டலஸ் அழகப்பெரும தலைமையிலான சுதந்திர மக்கள் காங்கிரஸ் ஒன்றிணைந்து கூட்டணியை அமைக்கவும் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது. புதிய அரசியல் கூட்டணி எதிர்வரும் ஜனவரி மாதம் அமைக்கப்படும் என்று சுதந்திரக் கட்சியின் தலைவரும், முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

இதேவேளை- ஐக்கிய மக்கள் சக்தி எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் தமிழ் மற்றும் முஸ்லிம் அரசியல் கட்சிகளுடன் கூட்டணி அமைக்கத் தீர்மானித்துள்ளது என்றும் அறியமுடிகிறது. (ம)

# கூட்டணிக்குள் வேலுகுமார்

கொழும்பு, டிசெ. 19

தமிழ் முற்போக்குக் கூட்டணியிலிருந்து இடைநிறுத்தப்பட்டிருந்த கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.வேலுகுமார் மீண்டும் கூட்டணிக்குள் உள்வாங்கப்பட்டுள்ளார்.

பாதீட்டுக்கு எதிராக வாக்களிக்கவேண்டும் என்ற முடிவை தமிழ் முற்போக்குக் கூட்டணி எடுத்திருந்தது. எனினும், வேலுகுமார் நடுநிலை வகித்தார். கூட்டணியின் முடிவுக்கு இணங்கிச் செயற்படாததால், வேலுகுமாரைக் கூட்டணியில் இருந்து இடைநிறுத்தும் அறிவிப்பை தலைவர் மனோ கணேசன் விடுத்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ம-22)

# சுயநிர்ணயத்துடனான சமஷ்டிதான் இனப்பிரச்சினைகளுக்குத் தீர்வாகும்!

## அரசியல் ஆய்வாளர் யோதிலிங்கம் சுட்டிக்காட்டு

கொழும்பு, டிசெ. 19

இலங்கையின் அரச அதிகார கட்டமைப்புக்குள் ஆட்சிப் பொறிமுறையை உருவாக்குவதென்றால் அது சுயநிர்ணய உரிமையுடன் கூடிய சமஷ்டி ஆட்சியாகத்தான் இருக்கமுடியும் என்று அரசியல் ஆய்வாளர் யோதிலிங்கம் தெரிவித்தார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக அரசறிவியல்துறை மற்றும் அரசறிவியல் துறை பழைய மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் 'இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு பற்றிய உரையாடல்' எனும் தலைப்பில் இடம்பெற்ற கருத்தரங்கில் நேற்றுமுன்தினம் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில், ஒரு தேசிய இனத்தைத் தாங்கும் தூண்களாக இருப்பவை நான்கு விடயங்கள். அவை வாழும் நிலம், மொழி, பொருளாதாரம், கலாசாரம் என்பவையாகும். இந்த நான்கையும் அழிப்பதுதான் இனப்பிரச்சினை. தமிழர்களுடைய அடையாளங்களை ஏன் அவர்கள் அழிக்கின்றார்கள் என்றால் அவர்கள் இலங்கைத் தீவு சிங்கள பௌத்தர்களுக்கு மட்டுமே உரியது எனக் கருதுகின்றார்கள். ஆகவே ஏனைய இனங்கள் இலங்கைத்தீவில் வாழ்ந்துவிட்டுப்போகலாம். ஆனால், ஒரு தேசிய இனமாக இருக்க முடியாது என்பது அவர்களது நிலைப்பாடு.

இனப்பிரச்சினைக்கான தீர்வு எவ்வாறு இருக்கவேண்டுமெனில், குறித்த அழிவுகளிலிருந்து இனத்தின் இருப்பைப் பாதுகாப்பதே இனப்பிரச்சினைக்கான தீர்வாகக் காணப்படும். இலங்கையின் அரச அதிகார கட்டமைப்புக்குள் ஆட்சிப் பொறிமுறையை உருவாக்குவதென்றால் அது சுயநிர்ணய உரிமையுடன் கூடிய சமஷ்டி ஆட்சியாகத்தான் இருக்கமுடியும். தமிழ்மக்களுக்கு சுயநிர்ணய உரிமையுடன் கூடிய அதிகாரங்கள் தேவை.

குறிப்பாக தமிழ் மக்கள் தேசிய இனம் என்ற அடிப்படையில் அதற்குப் பிறப்பாலேயே உரித்துடையவர்கள். எனவே சுயநிர்ணய உரிமை முக்கியம். வடக்கு- கிழக்கு மாகாணங்கள் பிரிக்கப்பட்டுள்ளதால் பல விளைவுகள் ஏற்பட்டுள்ளது. குறிப்பாகத் தமிழ் மக்களின்கூட்டு இருப்புதுண்டாக்கப்பட்டது. தமிழ், முஸ்லிம் மக்கள் சிங்கள அரசின் தயவில் வாழும் நிலை உருவானது. வடக்கு - கிழக்கு இணைக்கப்படவேண்டும். அது தமிழர்களுக்கு அவசியம் - என்றார். (ம-27)

Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இனப்பிரச்சினையைத் தீர்க்க இந்திய மத்தியஸ்தம் தேவை!

## ஜனநாயக போராளிகள் கட்சியின் முதலாவது மாநாட்டில் வலியுறுத்து

யாழ்ப்பாணம், டிசெ. 19

இனப்பிரச்சினைக்கான தீர்வைக் காண்பதற்கு, பிராந்திய வல்லரசான இந்தியாவின் மத்தியஸ்தம் தேவை என்று ஜனநாயகப் போராளிகள் கட்சியின் முதலாவது தேசிய மாநாட்டின் கொள்கை விளக்கவுரையில் வலியுறுத்தப்பட்டுள்ளது.



ஜனநாயகப் போராளிகள் கட்சியின் முதலாவது தேசிய மாநாடு யாழ்ப்பாணம் ரில்கோ விருந்தினர் விடுதியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

இதன்போது வெளியிடப்பட்ட கொள்கை விளக்கவுரையில் மேலும் உள்ளதாவது:-

நாம் இந்த மண்ணிலே எமக்குரிய வரலாற்று மாண்புகளுடனும் சுயநிர்ணய உரிமையுடனும் வாழ வேண்டுமெனில் எமக்கென்று ஒரு சுதந்திர தேசத்தை உருவாக்க வேண்டுமென பல தசாப்தங்களாகப் போராடி இருக்கிறோம். ஜனநாயக ஏது நிலைகள் தகர்ந்துபோன சூழ்நிலையில் கட்டமைக்கப்பட்ட ஓர் இன அழிப்பு முறையை எதிர்கொள்வதற்காக ஏந்தப்பட்ட ஆயுதங்கள், ஒருதேசிய விடுதலைப் போராட்டமாக வியாபித்திருந்தது.

சிங்கள - பௌத்தம் என்ற அரசியல் கோட்பாடும், அதனை நிலை நிறுத்துவதற்காக தமிழருக்கு எதிராக இழைக்கப்பட்ட அநீதியுமே இன்று வரை பிரச்சினைக்கு மூலவேர் என்பதை இலங்கை சிங்கள தேசம் முதலில் உணர்ந்துகொள்ளவேண்டும். அதை எதிர்காலத்தில் வெற்றிகொள்வதற்காக பின்வரும் முன்மொழிவுகளைக் கொள்கை நீதியாக பரிந்துரைக்கிறோம்.

தமிழருக்கான அரசியல் தீர்வு விடயத்தில் தமிழ்த் தேசிய பொதுக்கட்டமைப்பின் அவசியத்தை வலியுறுத்துவதுடன், தமிழ் தேசியக் கட்சிகள், சிவில் அமைப்புகள், புத்திஜீவிகள், போராளிகள் மற்றும் புலம்பெயர் தமிழர்களின் வகிபாகமும் அதில் இருக்கவேண்டும்.

ஈழத் தமிழருக்கான அரசியல் தீர்வு முன்மொழிவை தமிழர் தரப்பின் ஏகோபித்த வரைவாக இலங்கை அரசுக்கும் ஏனைய வகிபங்காளர்களுக்கும் சமர்ப்பித்தல்வேண்டும்.

எந்தவொரு பேச்சின்போதும் பிராந்திய வல்லரசான இந்தியாவின் தலைமையின்கீழ் சர்வதேச மத்தியஸ்தம் மற்றும் 13ஆவது திருத்தத்தை அடிப்படையாக வைத்து பிராந்தியங்களின் சுயாட்சி மற்றும் அதற்கு மேலான பொறிமுறை ஒன்றை அமைத்தல்வேண்டும்.

ஈழத்தமிழருக்கான தீர்வு முயற்சிகள் சம்பந்தமான எந்தவொரு பேச்சும் ஒரு காலவரையறையை அடிப்படையாக வைத்தே நடத்தப்பட வேண்டும் - என்றுள்ளது.

மாநாட்டில் கட்சியின் பொதுச் செயலாளர் இ.கதிர், தேசிய அமைப்பாளர் க.துளசி, உபதலைவர் ந.நகுலேஸ், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் வினோநோகராதலிங்கம், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் மாவை சோ.சேனாதிராசா, வடமாகாண சபை அவைத் தலைவர் சீ.வீ.கே.சிவஞானம், ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன், தமிழ்த் தேசியக் கட்சியின் செயலாளர் நாயகம் எம்.கே.சிவாஜிலிங்கம், தமிழ்த் தேசியப் பண்பாட்டுப் பேரவையின் தலைமை ஒருங்கிணைப்பாளர் எஸ்.நிஷாந்தன் மற்றும் அரசியற் கட்சிகளின் பிரதிநிதிகள், ஜனநாயகப் போராளிகள் கட்சியின் வடக்கு - கிழக்கு மாகாண உறுப்பினர்கள், முன்னாள் போராளிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ச-66)

## கசிப்புக் காய்ச்சிய சந்தேகநபர் கைது

யாழ்ப்பாணம், டிசெ. 19

சுன்னாகம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சூராவத்தைப் பகுதியில் கசிப்புக் காய்ச்சிய குற்றச்சாட்டில் 37 வயதுடைய நபரொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

சுன்னாகம் பொலிஸார் நேற்றுமுன்தினம் மேற்கொண்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போதே இந்தக் கைது இடம்பெற்றது. சந்தேகநபரிடமிருந்து 4.5 லீற்றர் கசிப்பு, 40 லீற்றர் கோடா மற்றும் கசிப்புக் காய்ச்சுவதற்கு பயன்படுத்தப்பட்ட உபகரணங்கள் என்பன மீட்கப்பட்டன என பொலிஸார் தெரிவித்தனர். (ச-27)

## விருந்துபசாரத்தில் 'ஐஸ்' 30 இளைஞர்கள் கைது

கொழும்பு, டிசெ. 19

உல்லாச விடுதியொன்றில் ஐஸ் போதைப்பொருள் பாவனையில் ஈடுபட்ட 30 இளைஞர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் காலி, பெந்தோட்டை - போதிமலுவ பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது.

போதைப்பொருள் பாவனையுடன் விருந்துபசாரம் இடம்பெறுகிறது என பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் இந்தக் கைது இடம்பெற்றது. கைதுசெய்யப்பட்டவர்கள் 21 முதல் 27 வயதுடையோர் எனவும் இவர்கள் வத்தளை, கொழும்பு புதுக்கடை, நாரஹேன்பிட்டி, கொட்டாஞ்சேனை, மாளிகாவத்தை, மட்டக்குளி, வலஸ்முல்ல உள்ளிட்ட பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் எனவும் பொலிஸார் தெரிவித்தனர். (ச-இ)

## கசிப்பு வைத்திருந்த இருவர் கைதாகினர்

யாழ்ப்பாணம், டிசெ. 19

சுன்னாகம் மற்றும் அச்சுவேலி ஆகிய பொலிஸ் பிரிவுகளுக்குட்பட்ட பகுதிகளில் கசிப்புக் காய்ச்சிய குற்றச்சாட்டில் இருவர் கடந்த வெள்ளிக்கிழமை கைதுசெய்யப்பட்டுள்ளனர் என பொலிஸார் தெரிவித்தனர்.

சுன்னாகம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஏழாலை வடக்குப் பகுதியில் கசிப்புக் காய்ச்சப்படுகிறது என சுன்னாகம் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலுக்கமைய சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் 750 மில்லி லீற்றர் கசிப்பை மீட்டதுடன் சந்தேகநபர் ஒருவரையும் கைதுசெய்தனர்.

அதேவேளை பத்தமேனிப் பகுதியில் கசிப்பை உடைமையில் வைத்திருப்பதாக அச்சுவேலி பொலிஸாருக்குக் கிடைத்த புலனாய்வுத் தகவலின் அடிப்படையில் 375 மில்லிலீற்றர் கசிப்புடன் 30 வயதுடைய சந்தேகநபர் ஒருவரை அச்சுவேலி பொலிஸார் கைதுசெய்தனர். (ச-125)

## நத்தார் வர்த்தகம் குடாநாட்டில் சூடு

யாழ்ப்பாணம், டிசெ. 19

யாழ்.குடாநாட்டு வர்த்தக நிலையங்களில் தற்போது நத்தார் அலங்காரப் பொருள்களின் விற்பனை சூடுபிடித்துள்ளது.

கிறிஸ்மஸ் பண்டிகை நெருங்குவதையடுத்து கிறிஸ்மஸ் மரம், பாலன்குடில்கள் போன்ற அலங்காரப் பொருள்கள் விற்பனை நிலையங்களில் அதிகளவில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

எனினும், அவற்றின் விலைகள் கடந்த வருடத்தைக் காட்டிலும் இந்தமுறை இரட்டிப்பாக அதிகரித்துள்ளது என நுகர்வோரால் தெரிவிக்கப்படுகிறது. (ச-17)

## காதலிப்பதாக ஏமாற்றி இளைஞர் பணம் பறிப்பு

வவுனியா, டிசெ. 19

திருமணம் செய்வதாகப் பழகி பகிர்ந்துகொண்ட ஒளிப்படங்களை வைத்து மிரட்டி இளைஞர் ஒருவர் பணம் பறித்துள்ளார் என பாதிக்கப்பட்ட யுவதி ஒருவர் அண்மையில் வவுனியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

முறைப்பாட்டை மீளப்பெறுமாறு குறித்த இளைஞரின் தரப்பால் பாதிக்கப்பட்ட யுவதியின் குடும்பத்தினருக்கு அச்சுறுத்தல் விடுக்கப்படுகின்றது எனவும் தெரிவிக்கப்படுகிறது. சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை வவுனியா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ச-18)

## கச்சாய் வீதியில் நடமாடிய முதலை மடக்கிப் பிடிப்பு

சாவகச்சேரி டிசெ.19

கச்சாய் வீதி புனித லிகோரியார் ஆலய வளாகத்தில் நடமாடிய ஐந்து அடி நீளமான முதலை அந்தப் பகுதி இளைஞர்களால் கடந்த வியாழக்கிழமை மடக்கிப் பிடிக்கப்பட்டது.

ஆலயத்தின் பின்புறப் பகுதியில் நடமாடிய முதலையைக் கண்ட சிறுவர்கள் சத்தமிட அங்கு வந்த அயலவர்கள் முதலையைப் பிடித்துக் கட்டி வைத்தனர். அதன்பின்னர் வனஜீவராசிகள் திணைக்களத்தினருக்குத் தகவல் வழங்கி, திணைக்கள அதிகாரிகளிடம் முதலை ஒப்படைக்கப்பட்டது.

இதேவேளை- அன்றையதினம் சாவகச்சேரி சிவன் கோயில் வீதியிலுள்ள காணிக்குள் எட்டு அடி நீள முதலை பிடிக்கப்பட்டு வனஜீவராசிகள் திணைக்களத்தினிடம் ஒப்படைக்கப்பட்டது. (எ-14-9)

## கார் மோதியதில் ஒருவர் காயம்

சாவகச்சேரி டிசெ.19

வேகக் கட்டுப்பாட்டை இழந்த கார் வீதியோரத்தில் சென்ற சைக்கிளை மோதியதில் அதில் பயணித்த குடும்பத்தலைவர் காயமடைந்தார்.

இந்தச் சம்பவம் நேற்றுக்காலை நாவற்குழிச் சந்தியில் இடம்பெற்றது.

குறித்த பகுதியைச் சேர்ந்த சாந்தகுமார் (வயது-33) என்னும் நபரே காயமடைந்தவராவார். அவர் யாழ்ப்பாணப் போதனா மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளார். (ம-9)

## வயோதிபப் பெண்ணிடம் சங்கிலி கொள்ளை!

முல்லைத்தீவு, டிசெ. 19

முல்லைத்தீவு - மாங்குளம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் வயோதிபப் பெண்ணொருவரிடம் இருந்து சங்கிலி கொள்ளையிடப்பட்டுள்ளது.

தனிமையில் வசித்துவந்த குறித்த வயோதிபப் பெண்ணின் வீட்டுக்குள் நேற்றுமுன்தினம் அதிகாலை நுழைந்த கொள்ளையர்கள், அவர் அணிந்திருந்த தங்கச் சங்கிலியை அறுத்துச் சென்றுள்ளனர். இது தொடர்பில் மாங்குளம் பொலிஸாரிடம் முறையிடப்பட்டுள்ளது. (ம-13)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**பிள்ளையார் கதை**

ஓய்வுறக்கம் எட்டுணையும் நோக்காதுன் தலம்அணைந்தோம்
தயாநிதியே உன்னருளை வேண்டுகிறோம்- கருணையுடன்
மலம்மூன்றின் முனைப்பகற்றி மூவாசையின் வலிகெடுத்து
மகிழ்வுறவே நாம்வாழ அருள் -முருகு

# வங்களா விரிகுடாவில் தாழமுக்கம் வலுநிலை

## அவதானமாக இருக்குமாறு மக்களுக்கு அறிவுறுத்தல்

மன்னார், டிசெ. 19

வங்களாவிரிகுடாவில் தாழமுக்கம் ஏற்படுவதால் எதிர்வரும் 4 தினங்கள் கனமழைக்கும், பலத்த காற்றுக்குமான சாத்தியக்கூறுகள் காணப்படுகின்றன. எனவே, மக்கள் மிகவும் அவதானமாக இருக்கவேண்டும் என்று இடர் முகாமைத்துவ நிலையம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

இதுதொடர்பில் இடர் முகாமைத்துவ நிலையம் வெளியிட்ட அறிக்கையில் மேலும் உள்ளதாவது:- தற்போது வங்களா விரிகுடாவில் தாழமுக்கம் வலுப்பெற்று வருகின்றது என வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது. திங்கள் முதல் வியாழக்கிழமை வரை அதிகளவான மழைவீழ்ச்சியுடன் பலத்த காற்று வீசக்கூடிய சாத்தியக்கூறுகள் காணப்படுகின்றன. பல இடங்களில் இடியுடன் கூடிய மழை பெய்யலாம். சில இடங்களில் 75 மில்லிமீற்றர் அளவில் கனமழை பெய்யக்கூடும். எனவே மக்கள் மின்னல் தாக்கங்களால் ஏற்படக் கூடிய பாதிப்புக்களைக் குறைத்துக்கொள்ள அவதானத்துடன் செயற்படுவதுடன் விவசாயிகள் தங்களுடைய கால்நடைகளையும் பாதுகாப்பான சூழலில் பராமரிக்குமாறு அறிவுறுத்தப்படுகின்றார்கள். மேலும் மீனவர்கள் குறித்த தினங்களில் கடலுக்குச் செல்வதை தவிர்க்கும்படியும் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்- என்றுள்ளது. (ச-213)

## வாசகர் திருமுகம்

### உளநலம் பாதிக்கப்பட்ட மக்களுடைய மருந்துக்கும் பணத்துக்கும் வழிசெய்க!

வறுமைப்பட்டவர்களுக்கு வறுமையின் கொடுமையும் நோயாளிக்கு நோயின் வலியும் புரியும். ஆனால், இரண்டும் ஒரு மனிதனுக்கு ஏற்பட்டால் எதைத் தாங்குவது? நான் 2009ஆம் ஆண்டு இறுதிக் கட்டப் போரில் பாதிக்கப்பட்டு தொடர் சிகிச்சை பெறும் நோயாளி. நோயின் கொடுமையால் தொழில்ரீதியாகவும் பாதிக்கப்பட்டு அதனால் ஏற்பட்ட வறுமையோடும் போராடிக் கொண்டிருக்கின்றேன். என்போன்று தாயகத்தில் பல குடும்பங்கள் உள்ளன. கடந்த ஆறு மாதங்களாக என்போன்று பாதிக்கப்பட்ட நோயாளருக்கு மருத்துவமனையில் வழங்கப்படும் 'சோடியன் குளோரைட்' மருந்து இருப்பில்லை. இதனால், தனியார் மருந்தகங்களில் அதிக விலையில் வாங்கியே பாவித்து வருகின்றோம். மருத்துவத்துறை இவ்விடயத்தில் கவனமெடுக்க ஏன் தயங்குகிறது?


என்போன்ற ஊனமுற்றவர்களுக்கு அரசு வழங்கும் 5 ஆயிரம் ரூபா கொடுப்பனவை இதுவரை காலமும் வங்கிகளில் மாதாமாதம் இலகுவாகப் பெறமுடிந்தது. அண்மையில் சமுர்த்தி வங்கிகளுக்கு மாற்றப்பட்டதால் அந்தக் கொடுப்பனவு ஒழுங்கான முறையில் என்போன்றவர்களுக்கு ஒழுங்காகக் கிடைப்பதில்லை. சமுர்த்தி வங்கியில் புரட்டாதி மாதப் பணம் மட்டும் வழங்கப்பட்டது. ஐப்பசி, கார்த்திகை மாதப் பணம் இன்னும் கிடைக்கவில்லை.

வறுமைப்பட்ட என்போன்ற நோயாளர்கள் (தொழிலிழந்தவர்கள்) பணமும் கிடைக்காததால் எதைக்கொண்டு மருந்தை வாங்குவது. யாரோடு நோவது? யாருக்கு எடுத்துரைப்பது?

எனவே என்போன்ற ஊனமுற்றவரின் கொடுப்பனவுப் பணத்தையாவது மாதாமாதம் வழங்கினால் மருந்தையாவது வாங்கி சற்று நிம்மதியாக வாழலாமே. சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளே! நீங்கள் கண்ணாடிக்கூட்டில் இருந்து என்போன்ற அப்பாவி வறுமைப்பட்ட நோயாளர் மீது கல்லெறியாதீர்கள். நாங்களும் இந்த நாட்டுப் பிரஜைகள் என்பதை மறந்து விடாதீர்கள்!

**அ.அன்பு**, வரணி

# இன்றைய நாள் (ராசிபலன்)



**மேடம்:** புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். சகோதர வகையில் எதிர்பாராத செலவுகள் ஏற்படக்கூடும். அனுகூலம் உண்டாகும். நண்பர்கள் மூலம் மகிழ்ச்சி தரும் செய்தி கிடைக்கும்.

**இடபம்:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும். எதிர்பார்த்த உதவி கிடைக்கும். மனவருத்தங்கள் நீங்கும். வியாபாரம் வழக்கம்போல் நடைபெறும். செலவுகள் ஏற்படும்.

**மிதுனம்:** வழக்கமான பணிகளில் மட்டுமே ஈடுபடவும். பிள்ளைகளின் உடல் நலனில் கவனம் தேவை. உறவினர்கள் உதவி கேட்டு வருவார்கள். எதிர்பாராத செலவுகள் ஏற்படக்கூடும்.

**கடகம்:** புதிய முயற்சிகளில் ஈடுபடுவதைத் தவிர்த்துவிடுவது நல்லது. உறவினர்களால் செலவுகள் ஏற்படும். சகோதர வகையில் ஆதாயம் உண்டாகும். மகிழ்ச்சியான சூழ்நிலை காணப்படும்.

**சிம்மம்:** உற்சாகமான நாள். குடும்பத்தினர் உங்கள் ஆலோசனையை ஏற்றுக் கொள்வார்கள். உறவுகளால் மகிழ்ச்சி உண்டாகும். சிலருக்கு எதிர்பாராத பண வரவுக்கு வாய்ப்பு உண்டு.

**கன்னி:** எந்த முடிவையும் ஒரு முறைக்குப் பலமுறை யோசித்து எடுப்பது நல்லது. குடும்பத்தில் மற்றவர்களுடன் அனுசரித்துச் செல்லவும். சிறு சிறு பிரச்சினைகள் ஏற்படக்கூடும் .

**துலாம்:** உற்சாகமாகச் செயற்படுவீர்கள். குடும்பத்தில் உள்ளவர்களின் தேவைகளை நிறைவேற்ற செலவு செய்ய நேரிடும் என்பதால், கையிருப்பு கரையும்.

**விருச்சிகம்:** தொடங்கும் காரியங்கள் சாதகமாக முடியும். சிலருக்கு திடீர் செலவுகளால் கையிருப்பு குறையும். முக்கியமான முடிவுகள் எடுக்க வேண்டாம்.

**தனுசு:** அலைச்சலுடன் ஆதாயமும் இருக்கும். அவசர முடிவுகளைத் தவிர்க்கவும். சிலருக்கு திடீர் பண வரவுக்கு வாய்ப்பு உண்டு. வியாபாரத்தில் லாபம் இருக்கும்.

**மகரம்:** எதிலும் அவசரமில்லாமல் செயற்படவேண்டிய நாள். உறவினர்களுடன் வீண் மனஸ்தாபம் ஏற்படக்கூடும் என்பதால் பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.

**கும்பம்:** மனதில் இனம் தெரியாத குழப்பம் ஏற்படக்கூடும். அன்றாடப் பணிகளிலும் கூடுதல் கவனம் தேவை. வீண் விவாதங்கள் ஏற்படக்கூடும் பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.

**மீனம்:** புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். மகிழ்ச்சி உண்டாகும். உறவினர்களால் குடும்பத்தில் குழப்பங்கள் ஏற்பட வாய்ப்புள்ளதால் எச்சரிக்கையாக இருக்கவும்.



# மாற்றுத்திறனாளிகளால் கவனவீர்ப்புப் பேரணி!

முல்லைத்தீவு, டிசெ. 19

சர்வதேச மாற்றுத்திறனாளிகள் தினத்தை முன்னிட்டு முல்லைத்தீவு மாவட்ட மாற்றுத்திறனாளிகளால் கவனவீர்ப்புப் பேரணி ஒன்று கடந்த வெள்ளிக்கிழமை முன்னெடுக்கப்பட்டது.

முல்லைத்தீவு மாவட்ட பேருந்து நிலையத்திலிருந்து முல்லைத்தீவு மாவட்டச் செயலகம் வரை கவனவீர்ப்புப் பேரணி இடம்பெற்றது.

மாற்றுத்திறனாளிகளின் கல்வி, தொழில் வாய்ப்பு, தொழிற்பயிற்சி, தமக்கான விசேட தேவைப்பாடுகள் முதலான உரிமைகளை வலியுறுத்தி கவனவீர்ப்பு முன்னெடுக்கப்பட்டதோடு, மாற்றுத்திறனாளிகளுக்கான உரிமைகள் அடங்கிய மனுவும் முல்லைத்தீவு மாவட்டச்செயலரிடம் கையளிக்கப்பட்டது. (எ-14.19)

# ஞாயிறுகளிலும் வர்த்தகம்!

யாழ்ப்பாணம், டிசெ. 19

பண்டிகைக் காலத்தைக் கருத்திற்கொண்டு எதிர்வரும் பொங்கல் பண்டிகை வரைக்குமான ஞாயிற்றுக்கிழமைகளில் வர்த்தக நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு யாழ். வர்த்தகர்களிடம் யாழ். வணிகர் கழகம் கோரிக்கை விடுத்துள்ளது.

பொதுமக்களின் நன்மை கருதி இந்தக் காலப்பகுதியில் வரும் போயா விடுமுறை நாள்களிலும் வணிக நிறுவனங்களைத் திறந்து வர்த்தக நடவடிக்கையை முன்னெடுக்குமாறும் வணிகர் கழகம் அறிவுறுத்தியுள்ளது. (ம)

# மீள் சுழற்சி நிலைய திறப்பு விழா

சாவகச்சேரி, டிசெ. 19

சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டியில் நிர்மாணித்த பிளாஸ்ரிக் பொருள்கள் மீள் சுழற்சி நிலையம் இன்று திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு திறந்து வைக்கப்படவுள்ளது.

வேள்ட் விஷன் நிறுவனத்தால் பல மில்லியன் ரூபா செலவில் இந்த நிலையம் அமைக்கப்பட்டுள்ளது. சாவகச்சேரியில் தினமும் பெருமளவு பிளாஸ்ரிக் பொருள்கள் கிடைப்பதால் நகர சபை ஊடாக பிளாஸ்ரிக் மீள் சுழற்சி நிலையத்துக்கான பணிகள் கடந்த வருடம் கண்ணாடிப் பிட்டியில் ஆரம்பிக்கப்பட்டன.

கட்டடத்தின் பணிகள் தற்போது பூர்த்தி செய்யப்பட்டு இயந்திரங்கள் பொருத்தப்பட்டுள்ள நிலையில் அதன் செயற்பாடுகள் நாளை ஆரம்பிக்கப்படவுள்ளன.

மீள் சுழற்சி நிலையத்துக்குத் தேவையான வீதியோரங்கள் மற்றும் குடியிருப்புப் பகுதிகளில் காணப்படும் பாவனையற்ற பிளாஸ்ரிக் பொருள்களை சாவகச்சேரி பேருந்து நிலையத்துக்கு அருகில் உள்ள திண்மக்கழிவு வள நிலையத்தில் ஒப்படைத்து அதற்கான கட்டணத்தைப் பெற்றுக்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-14,9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## கார்த்திகைப்பூவும் நீலோற்பலமும்

நாடு பற்றியெரியும்போது பிடில் வாசித்த நீரோ மன்னனின் செயலை மறக்கடிக்கச் செய்யுமளவுக்கு இருக்கின்றது இலங்கை அரசாங்கத்தின் காரியங்கள். வரலாறு காணாத பொருளாதார நெருக்கடியால் ஒட்டு மொத்த இலங்கையின் எதிர்காலமே அல்லாடிக் கொண்டிருக்கையில், அரசாங்கம் இந்த நெருக்கடிக்குத் தீர்வு காண்பதற்காக துரித நடவடிக்கைகளில் இறங்கியிருக்க வேண்டும். தனியே சர்வதேச நாணய நிதியத்தின் கடனை மட்டும் நம்பியிராமல், உள்ளூர் உற்பத்திகளைப் பெருக்கி, ஏற்றுமதியை அதிகரித்து, மக்களின் வாழ்வாதாரச் சுமையைக் குறைக்கும் வேலைகளை தீயாகச் செய்வதுதானே அரசாங்கத்தின் கடமை? ஆனால், இலங்கை அரசாங்கம் இத்தகைய நடவடிக்கைகளை ஓரமாக வைத்துவிட்டு, 'இலங்கையின் தேசியமலர் நீலோற்பலமா? அல்லி மலரா?' என்ற 'அதிதீவிர ஆராய்ச்சியில்' இறங்கியிருக்கிறது.

ஒருநாட்டின் சிறப்பையும், தனித்துவத்தையும் வெளிப்படுத்தும் அடையாளமாக தேசியச்சின்னங்கள் பிரகடனப்படுத்தப்பட்டிருக்கின்றன. தேசிய மிருகம், தேசியப்பறவை, தேசிய மலர், தேசிய மரம் என்று பிரகடனப்படுத்தப்படும் குறித்த தேசியச் சின்னங்கள் அந்த நாட்டை சர்வதேச ரீதியில் அடையாளப்படுத்தவும் உதவுகின்றன. இந்தநிலையில்தான் இலங்கையின் தேசியமலராக 1986ஆம் ஆண்டு - அதாவது இலங்கை பிரிட்டனின் ஏகாதிபத்தியத்தில் இருந்து விடுபட்டு 38 வருடங்களின் பின்னர் நீலோற்பல மலர்பிரகடனப்படுத்தப்பட்டது. ஆனால், தபால்முத்திரை போன்றவற்றில் நீலோற்பலம் மலரின் புகைப்படத்துக்குப் பதிலாக ஊதா நிற அல்லிமலரின் புகைப்படமே பயன்படுத்தப்பட்டது. 1986ஆம் ஆண்டில் இருந்து தொடர்ந்து வந்த இந்தத் தவறு, 2010ஆம் ஆண்டுதான் பேராசிரியர் தீப்தி யகந்தாவலவால் கண்டுபிடிக்கப்பட்டு, அரசாங்கத்துக்கும் சுட்டிக்காட்டப்பட்டது. ஆனாலும் அதன் பிறகும் இந்தக் குளறுபடி இன்றளவும் தொடரவே செய்கின்றது. எனவேதான் 'நீலோற்பலமா? நீல அல்லியா?' இலங்கையின் தேசியமலர் என்பதைத் தெளிவு படுத்த ஒரு குழு அரசாங்கத்தால் அமைக்கப்பட்டிருக்கிறது.


நீண்டகாலமாகத் தெளிவற்றிருக்கும், குளறுபடியான விடயமொன்றுக்கு தீர்வொன்றைக்காண முயற்சி எடுக்கப்படுவது வரவேற்கத்தக்கதுதான். ஆனால், எந்தவொரு செயலுக்கும் இடம், பொருள், காலம் என்ற விடயங்களும் கவனத்திற்கொள்ளப்படவேண்டும். ஒரு மரணச்சடங்கில் நின்றுகொண்டு, திருமணம் ஒன்றுக்கான முன்னெடுப்புகளில் ஈடுபடுதல் எவ்வளவு அபத்தமோ அதையொத்ததே, நாட்டில் பஞ்சம் தலைவிரித்தாடும் நிலையில், தேசியமலர் பற்றிய மீளாய்வுக்கென அரசாங்கம் குழு அமைத்துள்ள விடயமும். விவசாயிகளின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கோ, உள்ளூர் உற்பத்திகளைப் பெருக்குவதற்கோ, அல்லது இந்தப் பொருளாதார நெருக்கடிக்கு மூலகாரணமான இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கோ குழுக்களை அமைக்க வேண்டிய நேரத்தில், தேசியமலர் எது என்று கண்டறியக் குழுவை அமைத்து எல்லோரின் கிண்டலுக்கும் ஆளாகியிருக்கிறது அரசாங்கம்.

புலிகளின் காலத்தில் தமிழர் தாயகத்தில் நிழல் அரசு ஒன்று செயற்பட்டபோதே, தமிழ்த் தேசத்துக்கான தேசியச் சின்னங்களை பொருத்தப்பாடாகவும், அறிவியல்பூர்வமாகவும் கண்டறிந்து பிரகடனப்படுத்தியிருந்தார்கள். புலிகளுக்கேயுரித்தான சிவப்பு, மஞ்சள் வர்ணம், தீப்பிளம்பு போன்ற வடிவம், நஞ்சுண்ட வீரர்களை நினைவூட்டும் விஷத்தன்மை, மாவீரரை நினைவுகூரும் மாதத்தில் மலர்தல், பண்டைய தமிழர் வாழ்வியலில் கார்த்திகைப் பூவின் பயன்பாடு என்ற பல்வேறு அம்சங்களை மனதில் கொண்டே கார்த்திகைப் பூவை தமிழ்த் தேசிய மலராக புலிகள் அறிவித்தார்கள்.

புலிகள் இல்லாமற் போய்விட்ட இந்தக் காலத்திலும் கூட, தமிழ்த்தேசத்தின் தேசமலர் எதுவெனக் கேட்டால், எல்லோரும் கார்த்திகைப் பூவை சட்டென அடையாளம் காட்டுவார்கள். அந்தளவுக்கு தேசியச் சின்னங்களைப் பிரகடனப்படுத்துவதிலும், அதை மக்களிடம் கொண்டு சேர்ப்பதிலும் புலிகள் தெளிவாக இருந்தார்கள். ஆனால், சிங்கள -பௌத்த பேரின அரசு, கார்த்திகைப்பூவை கிழங்கோடு பெயர்த்து அழிப்பதிலும், பேஸ்புக்கில் கார்த்திகைப் பூ படத்தை பதிவிடுவோருக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதிலும் காட்டிய அக்கறையைக் கொஞ்சமேனும் நீலோற்பல விடயத்தில் காட்டியிருந்தால், பொருத்தமற்ற தருணத்தில் இப்படியெல்லாம் தேசியமலருக்கான மீளாய்வுக் குழுவை அமைத்து அவமானப்படவேண்டியிருந்திருக்காதே.

## நாளொரு நல்வார்த்தை

"மனித இருப்பின் ஒரே,
இறுதியான இலக்கு
மனதை விவசாயத்தைப் போல்
பண்படுத்துதல் தான்"
–அம்பேத்கர்



கூட்டமைப்பை உடைத்து

# தனித்துப் போட்டியிட வாய்ப்புக் கிடையாது

## பா.கஜதீபன் மீண்டும் திட்டவட்டம்

யாழ்ப்பாணம், டிசெ. 19

எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தல்களில் கூட்டமைப்பாகத்தான் போட்டியிடுவோம். தனித்துப் போட்டியிடும் பேச்சுக்கே இடமில்லை என்று மீண்டும் திட்டவட்டமாகத் தெரிவித்தார் புளொட் அமைப்பின் முக்கியஸ்தரும் முன்னாள் மாகாணசபை உறுப்பினருமான பா.கஜதீபன்.

எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தலில் கூட்டமைப்பின் பங்காளிக்கட்சிகள் அந்தக் கட்சித் தலைவர்களின் சம்மதத்துடன் சில இடங்களில் தனித்தனியாகப் போட்டியிடுவது தொடர்பில் பரிசீலிக்கப்படுகின்றது என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்திருந்தார். தொழில்நுட்ப ரீதியாக ஆராய்ந்து எவ்வாறு போட்டியிட்டால் கூடுதல் ஆசனங்கள் கிடைக்கும் என்று சிந்தித்து அதன்படி அந்தந்த இடங்களில் போட்டியிடுவது தொடர்பில் முடிவெடுக்கப்படும் என்றும் தெரிவித்தார்.

இதையடுத்து செய்தியாளர் சந்திப்பை மேற்கொண்ட புளொட் அமைப்பின் முக்கியஸ்தரான கஜதீபன் தெரிவிக்கையில்; தனித்தனியாகப்போட்டியிட முடியாது. கூட்டமைப்பாகவே போட்டியிடுவோம். தமிழரசுக் கட்சி விரும்பினால் தனிவழி செல்லலாம் என்று தெரிவித்தார். இதன்பின்னர் கருத்துத் தெரிவித்த சுமந்திரன், தனித்துப் போட்டியிடும் முடிவு தனது தனிப்பட்ட முடிவு அல்ல என்றும், அது கூட்டமைப்பின் பங்காளிக்கட்சிகளின் தலைவர்களின் சம்மதத்துடன்தான் மேற்கொள்ளப்பட்டது. விடயங்கள் தெரியாமல் சிலர் கருத்துக்களை முன்வைக்கின்றனர் என்றும் தெரிவித்திருந்தார்.

இதற்குப் பதில் வழங்குகையிலேயே கஜதீபன், தனித்துப் போட்டியிடுவது என்பது எமது கட்சியின் முடிவு அல்ல. கூட்டமைப்பாகவே போட்டியிடுவோம் என்று மீண்டும் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

'கூட்டமைப்பு பிளவடையாமல் இருப்பதையே மக்கள் எதிர்பார்க்கின்றனர். எனவே தனித்துப்போட்டியிட முடியாது என்பது எமது கட்சியின் முடிவு. ஒற்றுமையைக் குலைக்கும் தவறான முன்னுதாரணங்களை அடுத்த தலைமுறைக்குக் காண்பிக்கக் கூடாதென்பதற்காகவே, இப்படியான முன்மொழிவுகளை எதிர்க்கிறோம். எமது ஆட்களை பதவியில் இருத்த வேண்டுமென்பதாலோ அல்லது வேறு காரணங்களினாலோ அல்ல.


2018ஆம் ஆண்டு உள்ளூராட்சித் தேர்தலில் கிட்டத்தட்ட 30 வீதமான வாக்குகளைத்தான் பெற்றோம். நாங்கள் 50 வீதத்துக்கு அதிக வாக்குகளைப் பெற்றிருந்தால், சபைகளில் நெருக்கடியில்லாமல் ஆட்சியமைத்திருக்கலாம். அப்படியான பொறிமுறையை உருவாக்க நாங்கள் எல்லோரும் சேர்ந்து முயற்சிக்க வேண்டும். வாக்கு குறைந்ததற்கு என்ன காரணமென்பதை ஆராயாமல், வெறுமனே தொழில்நுட்பரீதியிலான காரணங்கள் எனக் கூறி, தொழில்நுட்பத்தின் மீது பழியைப் போட்டுவிட்டு நாங்கள் வேலைசெய்ய முடியாது. நாங்கள் தேசியரீதியாக தேர்தல் முறையை மாற்ற வேலைசெய்ய வேண்டும். அடிமட்டத்தில் இன்னும் பலமான அடித்தளத்தை உருவாக்கி, மற்ற தமிழ்த் தேசியக் கட்சிகளையும் இணைத்துச் செயற்படவேண்டும்- என்றார். (ம-20,27)

நாளை
20.12.2022
செவ்வாய்க்கிழமை
மார்கழி 05

சுபநேரம் : 10.54 - 12.24
ராகுகாலம் : 03.24–04.54

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விண்ணக நுழைவின் 25 ஆண்டுகள் நிறைவு நினைவஞ்சலி



மண்ணில்
15.01.1923

விண்ணில்
19.12.1997

## அமரர் அந்தோனிப்பிள்ளை போல்ராஜா

**பாஷையூர், யாழ்ப்பாணம்.**

(ஆசிரியர் – பதுளை சரஸ்வதி மகா வித்தி, புனித பத்திரிசியார் கல்லூரி, யாழ்.
மாநகரசபை உறுப்பினர், உதவி தவிசாளர் (இலங்கைத் தமிழ் காங்கிரஸ்)
சமாதான நீதவான்

**"நாம் இவ்வுலகில் குடியிருக்கும் உடலாகிய கூடாரம் அழிந்து போனாலும் கடவுளிடமிருந்து கிடைக்கும் வீடு ஒன்று நமக்கு உண்டு" (2 கொரி 5:11)**

நிலை வாழ்வின் வீடுபேற்றை
நிரந்தரமாய் அடைய
தூயவர் கூட்டத்தோடு இணைந்து
துதிபுகழ்பாடி இன்புற
மண்ணக வாழ்விற்கு விடை கொடுத்து
மங்கா ஒளிநிறை பரமனின் பாதவடி சேர்ந்தீர்கள்

நித்தியருடன் இணைவதே நீங்காத பேரின்பம் என்பதைக்
கண்ணியமாய் காத்து
கருத்துடன் வாழ்ந்தீர்கள்
குடும்பத்திற்காய் கடினமாய் உழைத்தீர்கள்
பிறர் வாழ உங்களைப் பகிர்ந்தீர்கள்

நற்பண்புகளை எம் இதயத்தில் விதைத்தீர்கள்
செல்வத்தில் எளிமையையும்
வறுமையில் செம்மையையும்
வாழ்ந்து காட்டினீர்கள்
நேர்மைக்கு இலக்கணமானீர்கள்
நெஞ்சுறுதியை உரமாக்கினீர்கள்

உறவுகளுக்குப் பாலம் அமைத்தீர்கள்
விசுவாசத்தில் வச்சிரத் தூணாகினீர்கள்
சமய, சமூக, கல்வி வளர்ச்சியில் ஈடுபாட்டோடு செயல்பட்டீர்கள்
நீங்கள் கற்றுத் தந்த வாழ்வின் பாடங்களை
உங்கள் நினைவின் நன்றிக்கடனாய் செலுத்திட
எமக்காய் இறைவனிடம் பரிந்துரைக்க வேண்டுகின்றோம்.

**"உங்கள் ஆன்மா இறைவனில் என்றும் இளைப்பாறுவதாக"**

**என்றும் உங்களுக்காக இறைவனிடம் பரிந்துரைக்கும்**

**அன்பு மனைவி றெஜீனா,**
**பிள்ளைகள் : லூயிபோல்ற்றன், றெஜி போல்ற்றன்,**
**இயூட் மார்செலா (கனடா), யூஜின் லொயலா (இந்தியா)**
**அருட்சகோதரி லூமினா போல்ராஜா (ஐ.கு.க),**
**மருமக்கள், பேரப்பிள்ளைகள்**

(CS 22117)(3/6)


யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் .....

**இம் மாதம் 16 ஆம் திகதி முதல்**
**நத்தார் மற்றும் புதுவருட**

## ஜவுளிப் பண்டிகை

**ஆண்கள் மற்றும் பெண்களுக்கான தலை சிறந்த ஆடைகள்**

திருமண பட்டுச் சாறிகள்,
கொட்டன் சாறிகள்,
சல்வார்கள்,
சல்வார் துணிகள்,
டொப், புரோக்
மற்றும் ஏராளமான
ஆடைத் தெரிவுகள்



**நெற் சல்வார், கொட்டன் சல்வார்**
**~~5000/=~~ 2000/=**

இது பிரமாண்ட ஜவுளித் துறையின் சாம்ராஜ்யம்

## இந்தியன் செலக்ஷன்

காலம் : 16.12.2022 முதல் 31.12.2022 வரை
இடம் : வீரசிங்கம் மண்டபம், யாழ்ப்பாணம்
(ஞாயிற்றுக்கிழமைகளிலும் திறந்திருக்கும்)


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
19.04.1935

மறைவு
29.12.2021

## அமரர் பொன்னம்பலம் காமாட்சி

**(7 ஆம் வட்டாரம், நயினாதீவு)**

ஈரைந்து மாதம் இருட்டறையில் எமைச் சுமந்து
இவ்வுலகில் ஒளியைத் தந்த தாயே !

ஏழ்மையை ஏணியாக்கி எம்மை
இமயம் தொட வைத்த தெய்வமே !

இரும்புப் பெண்ணாய் உலகை வலம் வந்து
இத்தாலியில் சங்கமித்த எம் இதயமே !

கண்ணீரைக் கடன் வாங்கிக் காலமெல்லாம் அழுதாலும்
நீங்கள் பண்ணிய கடனுக்குப் போதாதம்மா !

ஆண்டொன்று போனாலும் ஆறாத வடுவாகி
நீண்ட காலம் வரை நீளுமம்மா....

ஆடும் பொன்னம்பலத்தான் அடியில் காமாட்சியாய்
அமர்ந்து ஆசிர்வாதம் தந்திடம்மா....

**குடும்பத்தினர்**

(CS 48162) (2/6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவிழா வாழ்த்தும் சேவை நலன் பாராட்டும்

### திருமதி சிவபுரத்தரசி கிரிதரன்

(SLTS -I பகுதித்தலைவர்)

(பயிற்றப்பட்ட ஆரம்பக்கல்வி)



**சேவை விபரம்:**

- யா / கொட்டடி நமசிவாய வித்தியாலயம் 1990.03.27 - 2009.01.08
- யா/ யாழ் இந்து ஆரம்ப பாடசாலை 2009.01.09 - இன்றுவரை

பழம் பெரும் தமிழர் பெருமையினை எடுத்துரைக்கும்
யாழ் மண்ணில் பிறந்து இந்து ஆரம்ப அன்னையின்
மழலைகளுக்கு அறிவூட்டிய அன்பான ஆசானே!
அகவை அறுபதைக் கடந்து மணிவிழாக்காணும்
எங்கள் விழாநாயகியை வாழ்த்துகின்றோம்.
வாழ்க நீங்கள் பல்லாண்டு!

Congratulations

வாழ்த்துவோர்:
ஆசிரியர் நலன்புரிக்கழகம்
யா/ யாழ் இந்து ஆரம்ப பாடசாலை

(CS 48175) (2.6)


## சடலம் மீட்பு

மாத்தறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பிரவுன்ஸ் ஹில் பகுதியில் உள்ள கடற்கரையில் அடையாளம் தெரியாத நிலையில் ஆண் ஒருவரின் சடலம் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் காலை மாத்தறை பொலிஸாருக்குன் கிடைத்த தகவல் ஒன்றின் அடிப்படையில் சடலம் மீட்கப்பட்டுள்ளது. சடலமாக மீட்கப்பட்டவர் சுமார் 45 வயதுடையவராக இருக்கலாம்.

மாத்தறை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ-இ)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்

எமது பாடசாலையின் முதல்வர்

### திரு. இரத்தினம் நாகேந்திரன்

(SP.Trd, B.A, PGDE, SLPS I)



அவர்கள் இலங்கை அதிபர் சேவை தரம் 1 இற்கு (09.10.2018) இருந்து பதவி உயர்வு பெற்றமையை இட்டு பெருமகிழ்ச்சி அடைவதோடு மேலும் பல உயர்வுகள் பெற வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
ஆசிரியர் நலன்புரிச் சங்கம்
யா/விடத்தற்பளை கமலாசனி வித்தியாலயம்



## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



பிறப்பு
18.04.2000

இறப்பு
19.11.2022

கடந்த 19.11.2022 சனிக்கிழமை சிவபதமடைந்த
எமது ஏக புத்திரன்

### அமரர் விஜயேந்திரன் சஜிந்தன்

(நயினாதீவு – 7)

அவர்களின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் இன்று (19.12.2022) திங்கட்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் கொக்குவில் இல்லத்தில் நடைபெறும். அதனைத் தொடர்ந்து நடைபெறும் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும் மற்றும் மதிய போசன நிகழ்விலும் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**இல. 08, செம்பாட்டு ஒழுங்கை,**
**பொற்பதி வீதி, கொக்குவில்.**

**குடும்பத்தினர்**

(CS 48187) (3/6)



## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

மண்ணில்
21 - 11 - 1947



விண்ணில்
19 - 11 - 2022

அமரர்

### ஆறுமுகம் பேரின்பநாயகம் (குணம்)

(உரிமையாளர் - சபீதா உணவகம்)

கண்முன்னே வாழ்ந்த காலம்
கனவாகிப் போனாலும்
எம் முன்னே உங்கள் முகம்
எந்நாளும் உயிர்வாழும்
என்றுமே உங்கள் நாமம்
எமதுயிரே நெஞ்சிருத்தி
கண்ணீர் மலர்களினால்
காணிக்கை செய்கின்றோம்.

ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !! ஓம் சாந்தி !!!

என்றும் உங்கள்
நீங்காத நினைவலைகளுடன்
குடும்பத்தினர்

(cs 47934) (2.6)



## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மல்லாவி யோகபுரம் மேற்கைப் பிறப்பிடமாகவும் மட்டுவில் வடக்கு சாவகச்சேரியை வசிப்பிடமாகவும் கொண்ட

### சின்னத்தம்பி றஜனிதரன்

திதி: தேய்பிறை ஏகாதசி

பிறப்பு
12.03.1977

இறப்பு
29.12.2021

எம் குடும்பத்தின் மூத்த ஒளிவிளக்காய் ஒளிர்ந்தவனே!
ஆண்டு ஒன்று சென்றாலும் ஆறவில்லை எம்துயரம்
ஆறாத் துயரை நாங்கள் அனுபவிக்க நீ
மீளாத்துயில் கொண்டீரே எம் செல்வ மகனே
விடியும் பொழுதெல்லாம் உன் நினைவே எம் மனதில்
உன் பிரிவால் துடிக்கும் தாய் தந்தை
மீளாத்துயரில் தவிக்கும் உன் உடன் பிறப்புக்கள்
தினம் தினம் வேதனையில் தவிக்கும் உன் ஆசைத் தம்பி
ஆற்ற முடியாத் துயரில் தவிக்கும் உன் மனைவி
அப்பா, அப்பா என்று உன் வரவை எதிர்பார்த்துத்
துடிக்கும் உன் இரு பிஞ்சு மகள்கள்
இவர்களின் வேதனையை எங்கே சொல்லி அழுவேன்
மாமன்மார் மாமியார் மைத்துனர்கள் மருமக்கள்
- உற்றார் உறவினர்கள்
நண்பர்கள் விம்மியழ எங்கே நீ என்று
தேடுகின்றோம் உன்னை
நினைவில் எம்முடனும் நிஜத்தில் இறைவனிடமும்
கலந்த என் செல்வமே! உன் ஆத்மா சாந்தியடைய
இறைவனை வேண்டுகின்றோம்

**குடும்பத்தினர்.**

(CS 48158)(3/6)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



சிறுதொழில் முயற்சியாளர்களை ஊக்கப்படுத்தும்முகமாக வவுனியா மாவட்டச் செயலக சிறுதொழில் முயற்சி அபிவிருத்திப் பிரிவால் மாபெரும் விற்பனைக் கண்காட்சியும், மலிவு விற்பனையும் வவுனியா கலைமகள் சனசமூக நிலைய மைதானத்தில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இடம்பெற்றது. (ய-27)

# மரண அறிவித்தல்

மலர்வு 09 . 11 . 1986

உதிர்வு 23 . 11 . 2022



## சுந்தரலிங்கம் கிரிதரன்

திக்கம்புரை வயாவிளானை பிறப்பிடமாகவும் கல்வயல் சாவகச்சேரியை வசிப்பிடமாகவும் கொண்ட சுந்தரலிங்கம் கிரிதரன் கடந்த (23.11.2022) வெள்ளிக்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் சுந்தரலிங்கம் நாகேஸ்வரி தம்பதியரின் அன்பு மகனும், யேசுதாஸ்-சோதி தம்பதியரின் அன்பு மருமகனும், வேணுஜாவின் அன்புக் கணவரும், சர்மிகா, ஜனுஸ்ரன், கோபிஷன், ஓமிஷா ஆகியோரின் பாசமிகு தந்தையும், விஜிதரன், கஜந்தினி ஆகியோரின் பாசமிகு சகோதரனும், சைலஜா, சிந்துஜா, றாஜீவ், றேணுகா, சிவாஜீவ் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.12.2022) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் நல்லடக்கத்திற்காக முற்பகல் 11.00 மணியளவில் சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தொடர்பு: சிவாஜீவ் - 077 550 3257**
**தனேஸ் - 077 242 6600**
**கல்வயல், சாவகச்சேரி.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

(CR 38735) 1/6

உ
கணபதிதுணை

# தசாக கிருஹயக்ஞ அழைப்பு



அன்னை மடியில் 22.02.1939

ஆனைமுகன் அடியில் 11.12.2022

நிகழும் சுபகிருது வருடம் கார்த்திகை மாதம் 25ஆம் நாள் (11.12.2022) ஞாயிற்றுக்கிழமை கிருஷ்ணபட்ஷ திருதியை திதியில் இறைபதமடைந்த எமது அன்புத் தாயார்

## திருமதி சாரதாம்பாள் மகேஸ்வரசர்மா

அவர்களின் ஆத்மசாந்திக் கிரியைகள் பின்வரும் தினங்களில் நடைபெறும்.

(மார்கழி - 5) 20.12.2022 செவ்வாய்க்கிழமை - தசாகம் முற்பகல் 10.00 மணி
(மார்கழி - 6) 21.12.2022 புதன்கிழமை - ஏகோதிஷ்டம், மாசியம் முற்பகல் 10.00 மணி
(மார்கழி - 7) 22.12.2022 வியாழக்கிழமை - சபிண்டீகரணம் முற்பகல் 10.00 மணி
(மார்கழி - 8) 23.12.2022 வெள்ளிக்கிழமை - கிருஹயக்ஞம், சமாராதனை முற்பகல் 10.00 மணி
(மார்கழி - 9) 24.12.2022 சனிக்கிழமை - முற்பகல் 11.00 மணிக்கு தெல்லிப்பளை பன்னாலை வரத்தலம் கற்பகவிநாயகர் திருமண மண்டபத்தில் அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனை நிகழ்வும் நடைபெறும்.

அத்தருணம் அன்பர்கள் யாவரும் வருகைதந்து, பிரார்த்தித்து, அதன்பின்னர் நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் பங்குபற்றி ஏகுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**குறிப்பு:-இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருகைதருமாறு கேட்டுக் கொள்கின்றோம்.**


**வரத்தலம் கற்பக விநாயகர் கோவிலடி,**
**பன்னாலை, தெல்லிப்பளை.**

**குடும்பத்தினர்.**
**077 8213 149**

# மரண அறிவித்தல்

மழலையாய் 17 . 01 . 1944

மகிமையாய் 17 . 12 . 2022



## பேதுரு பற்றிக்

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட பேதுரு பற்றிக் கடந்த (17.12.2022) சனிக்கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை அவரது இல்லத்தில் இன்று (19.12.2022) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் நடைபெறும், பின்னர் பிப்பிலி CPM சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**இல. 99, யாழ். வீதி,**
**மானிப்பாய்.**

**தகவல்: குடும்பத்தினர்.**
**077 561 8795**

(CS 22[illegible]1-6)

# மரண அறிவித்தல்



## நல்லதம்பி இரத்தினசிங்கம்

(ஓய்வுபெற்ற ஆசிரியர்)

குப்பிழான் வடக்கைப் பிறப்பிடமாகவும் ஜேர்மனியை வதிவிடமாகவும் கொண்ட ஓய்வுபெற்ற ஆசிரியர் நல்லதம்பி இரத்தினசிங்கம் கடந்த (13.12.2022) செவ்வாய்க்கிழமை ஜேர்மனியில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நல்லதம்பி - ஆச்சிமுத்து தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கனகசபை - அன்னம்மா தம்பதியினரின் மருமகனும், காலஞ்சென்ற ஆசிரியை புவனேஸ்வரியின் (நீலா) அன்புக்கணவரும், ஸ்ரீரங்கன், ஸ்ரீரமணன், ஸ்ரீதாரணி ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்றவர்களான வயித்திலிங்கம், நல்லமுத்து, தையல்முத்து, பவளம்மா மற்றும் சிவலிங்கம் ஆகியோரின் சகோதரனும், நிர்மலா, இதயராணி, மதியாஸ், காலஞ்சென்ற பத்மராஜா ஆகியோரின் அன்பு மாமனாரும், ஸ்ரீதர்சினி, ஸ்ரீசிந்தி, ஜெனுசாந், காலஞ்சென்ற தர்சிகா மற்றும் மதுஷா, ஆதவன், அபிஷேக், லக்கிஜா ஆகியோரின் அன்புப்பேரனும், சஜானாவின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (20.12.2022) செவ்வாய்க் கிழமை ஜேர்மனியில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**வீரபத்திரகோவிலடி,**
**குப்பிழான் வடக்கு,**
**077 756 3661**

**தகவல்**
**நல்லதம்பி சிவலிங்கம்**
**சகோதரன்**

(CS 48190) (3/6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







தீவகத்தைப் பசுமையாக்கும் திட்டத்தின் கீழ், 'கிறீன் லேயர்' அமைப்பால் வேலணையில் நேற்றுமுன்தினம் மரநடுகை மேற்கொள்ளப்பட்டுள்ளது. (ய-20)

# முன்பள்ளி திறப்பு விழா

கிளிநொச்சி - கரைச்சிப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட புதுமுறிப்பு கிராம அலுவலர் பிரிவின் ஊற்றுப்புலம் கிராமத்தில் அமைக்கப்பட்ட ஜெகதீஸ் முன்பள்ளியின் திறப்பு விழா கடந்த புதன்கிழமை இடம்பெற்றது. சிறுவர்களின் முன்பள்ளிக் கல்வியை மேம்படுத்துவதற்காக வானவில் வாழ்வகத்தின் அனுசரணையில் இந்த முன்பள்ளி அமைத்துக்கொடுக்கப்பட்டது. வானவில் வாழ்வகத்தின் தலைவர் க.ரவிக்காந் தலைமையில் நிகழ்வு இடம்பெற்றது. (ம-14)

## ஆர்ஜென்ரீனா...

டாம் பாதியில் பிரான்ஸ் அணி திடீரென அதிரடி ஆட்டத்தை கையிலெடுத்து அந்த அணியின் நட்சத்திர வீரர் மாப்பே 80 ஆம் மற்றும் 81 ஆவது நிமிடங்களில் கோல் அடித்து சமநிலையாக்கினார்.

இதனால் மேலதிகமாக வழங்கப்பட்ட நேரத்தில் ஆர்ஜென்ரீனாவின் மெஸ்ஸியும், பிரான்ஸின் மாப்பேயின் தலா. ஒவ்வொரு கோல் அடிக்க மீண்டும் 3:3 என்ற கோல் கணக்கில் ஆட்டம் சமநிலையானதால் வெற்றியைத் தீர்மானிக்க பெனால்டி ஷூட் வழங்கப்பட்டது. இதில் 4:2 என்ற ரீதியில் பெனால்டி உதைகளைப் பெற்ற ஆர்ஜென்ரீனா சம்பியன் பட்டத்தை தனதாக்கியது. கால்பந்தின் கடவுள் எனப்படும் மரடோனா தலைமையிலான ஆர்ஜென்ரீனா அணி உலகச் சம்பியன் பட்டத்தை 1986 ஆம் ஆண்டு வென்ற பின்னர் மீண்டும் ஆர்ஜென்ரீனா இந்தமுறை மெஸ்ஸி தலைமையில் சம்பியனானமை குறிப்பிடத்தக்கது. (அ)

# கொத்து ரொட்டி விலை குறைப்பு

கொழும்பு, டிசெ. 19

நாடளாவிய ரீதியில் நேற்று நள்ளிரவு முதல் நடைமுறைக்கு வரும் வகையில் கொத்து ரொட்டி உள்ளிட்ட சில உணவுகளின் விலை 10 ரூபாவால் குறைக்கப் பட்டுள்ளதாக அகில இலங்கை சிற்றுண்டிச்சாலை உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது. கோதுமை மாவின் விலை குறைக்கப் பட்டதை அடுத்து இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டதாக சங்கத்தின் தலைவர் அசேல சம்பத் குறிப்பிட்டார். (அ-ஒ-இ)


## காணி விற்பனைக்கு

இராசபாதை வீதியில் கோப்பாய் பொலீஸ் நிலையத்திற்கும் (கோண்டாவில் - இருபாலை) இராசபாதை சந்திக்கும் இடையில் இராசபாதை வீதியை முகப்பாக கொண்ட காணி விற்பனைக்குண்டு. நேரில் வரவும்.

(CR 38796) (3/6) T.P :076 945 8101

## வேலையாட்கள் தேவை

யாழில் இயங்கும் பலசரக்கு மொத்த வியாபார நிலையத்திற்கு சிட்டை எழுதுனர், களஞ்சிய கணக்காளர் உடன் தேவை.

076 0094 946

## வேலையாட்கள் தேவை

பருத்தித்துறையில் இயங்கும் பார்சல் நிறுவனத்திற்கு ஆண், பெண் இருபாலாரும் தேவை. பருத்தித்துறையில் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது.

0777 66 77 15


## மரண அறிவித்தல்

### காசிப்பிள்ளை தங்கராசா



திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும் அளவெட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட காசிப்பிள்ளை தங்கராசா அவர்கள் நேற்று (18.12.2022) காலமானார்.


அன்னார் காலஞ்சென்ற காசிப்பிள்ளை துரையம்மா தம்பதியரின் பாசமிகு மகனும், காலஞ்சென்ற சின்னத்துரை இராஜேஸ்வரி தம்பதியரின் மருமகனும், குணரத்தினம் மற்றும் அமரர்களான மனோன்மணி இரத்தினசிங்கம், தேவதுரை, பரமேஸ்வரி, யோகராசா ஆகியோரின் பாசமிகு சகோதரனும், மீனலோஜினியின் அன்புக் கணவரும், அமரர் புவனேசதாசன், கௌரிதாசன், பத்மலோஜினி ஆகியோரின் மைத்துனரும், பகீரதி, பகீரதன், மயூரதி ஆகியோரின் தந்தையும், இராசேந்திரன், சிவசோதி ஆகியோரின் மாமனும், அரிகரன், காவியா, கஜவதனன், தக்ஷன், விருத்திகா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.12.2022) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 11.00 மணியளவில் தம்மளை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

12 . 03 . 1942



09 . 12 . 2022

### திரு.செல்லையா கணேசமூர்த்தி

கரவெட்டி மேற்கைப் பிறப்பிடமாகவும் கொழும்பு மார்க்கம் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்டிருந்த திரு.செல்லையா கணேசமூர்த்தி அவர்கள் டிசம்பர் மாதம் 9ந் திகதி லண்டனில் இறைபதம் அடைந்தார். அன்னார் காலஞ்சென்ற செல்லையா வள்ளிப்பிள்ளை தம்பதியினரின் (அத்துளுவார் வளவு) அன்பு மகனும் காலஞ்சென்ற சின்னையா செல்லம்மா தம்பதியினரின் மருமகனும் ஆனந்தநாயகியின் ஆருயிர் கணவரும் கவிதா Dr.சங்கீதா ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் கமல் மற்றும் Dr.ராஜ்ʼ வின் மாமனாரும் மாயா சஹானா ஆகியோரின் பாசமிகு பேரனும் சுந்தரமூர்த்தி காலஞ்சென்றவர்களான Dr.விநாயகமூர்த்தி புனிதவதி மற்றும் யோகமூர்த்தி MBE திலகவதி சத்தியமூர்த்தி கிருஷ்ணமூர்த்தி முருகமூர்த்தி ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்றவர்களான சிவபாக்கியம் உமாதேவி சிவசோதிலிங்கம் மற்றும் சியாமளா காலஞ்சென்ற ரஞ்சி. மற்றும் வதனி.மாலதி. சாந்தநாயகி. கமலநாயகி. அம்பிகாபதி. உமாபதி வசந்தநாயகி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார். அன்னாரின் தகனக்கிரியைகள் டிசம்பர் மாதம் 20ந் திகதி லண்டனில் நடைபெறும்.

தகவல்: [illegible]மூர்த்தி [illegible]2365388

## மரண அறிவித்தல்

01 . 07 . 1944



08 . 12 . 2022

### திருமதி. புனிதவதி சிவசோதிலிங்கம்

கரவெட்டி மேற்கைப் பிறப்பிடமாகவும் கொழும்பு, நியூசிலாந்து மற்றும் இங்கிலாந்தை வதிவிடமாகவும் கொண்டிருந்த திருமதி புனிதவதி சிவசோதிலிங்கம் அவர்கள் டிசம்பர் மாதம் 8ந் திகதி மாலை லண்டனில் இறைபதம் அடைந்தார். அன்னார் காலஞ்சென்ற திரு. வே. செல்லையா திருமதி வள்ளிப்பிள்ளை தம்பதியினரின் (அத்துளுவார் வளவு) அன்பு மகளும் காலஞ்சென்ற திரு. பொன்னையா திருமதி செல்லம்மா தம்பதியினரின் (புதுத்தோட்டம்) மருமகளும் காலஞ்சென்ற சிவசோதிலிங்கம் அவர்களின் அன்பு மனைவியும், நிர்மலன், நிரஞ்சன், நந்தன், Dr.சம்பந்தன் ஆரூரன் ஆகியோரின் பாசமிகு தாயாரும், கமலினி, கிரிஜா, வாணி, குமுதினி, சயந்தி ஆகியோரின் அன்பு மாமியும் பவன், பிரவீண், ராகவி, சுகன்யா சஞ்சய், தருணி, அனுஜன், நேத்ரா, ஹரிசன் ஆகியோரின் அன்புப் பேத்தியும் சுந்தரமூர்த்தி காலஞ்சென்றவர்களான Dr.விநாயகமூர்த்தி, கணேச மூர்த்தி, மற்றும் யோகமூர்த்தி MBE, திலகவதி, சத்தியமூர்த்தி, கிருஷ்ணமூர்த்தி, முருகமூர்த்தி ஆகியோரின் பாசமிகு சகோதரியும் காலஞ்சென்ற சிவபாக்கியம் காலஞ்சென்ற உமாதேவி ஆனந்தநாயகி, சியாமளா Dr.கனகரத்தினம் காலஞ்சென்ற ரஞ்சி, வதனி, மாலதி காலஞ்சென்ற நடராஜா ஆகியோரின் அன்பு மைத்துனியுமாவார். அன்னாரின் தகனக்கிரியைகள் டிசம்பர் மாதம் 20ந் திகதி லண்டனில் நடைபெறும். இத்தகவலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு அன்புடன் கேட்டு[illegible]கின்றோம்.

தகவல்: செ. சுந்தரமூர்த்தி - 07[illegible]388

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலாபமீட்டும் நிறுவனங்களை விற்பதற்கு அரசாங்கம் சதி!

## திஸ்ஸ விதாரண குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், டிசெ. 19

இலாபம் தருகின்ற ஸ்ரீலங்கா ரெலிகொம், இலங்கை மின்சாரசபை போன்ற நிறுவனங்களை தனியாருக்கும், வெளிநாடுகளுக்கும் விற்பதற்கு அரசாங்கம் முயற்சிக்கிறது என நாடாளுமன்ற உறுப்பினரும் லங்கா சமசமாஜக் கட்சியின் தலைவருமான பேராசிரியர் திஸ்ஸ விதாரண தெரிவித்தார்.

யாழ். ஊடக அமையத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்;

என்.எம்.பெரேரா பொருளாதாரத்தை உயர்த்த பல வேலைத்திட்டங்களைச் செய்தார். ஆனால், தற்போது எதுவுமே இல்லை. இதனால் இளைஞர்கள், யுவதிகள் நாட்டை விட்டு வெளியேறி வருகின்றனர். தோட்டத் தொழிலாளர்களை உரிமையாளர்களாக மாற்றி குறிப்பிட்ட நிலங்களை அவர்களுக்கு வழங்கினால், அவர்கள் முழுமூச்சாகப் பாடுபட்டு டொலரை ஈட்டுவார்கள்.

ஆனால், செவிடன் காதில் ஊதிய சங்கு போல அரசாங்கம் இருக்கிறது - என்றார். (ம-27)

## துயர் பகிர்கின்றோம்

எமது இசையாசிரியர் கழக அங்கத்துவ ஆசிரியை திருமதி சத்தியதேவி வேல்முருகன் அவர்களின் அன்புத் தந்தையார்

**திரு.வேலுப்பிள்ளை இரத்தினம்**

அவர்கள் கடந்த (19.11.2022) அன்று இறைபதம் அடைந்தார். அன்னாரது பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

யாழ். கல்வி வலய இசையாசிரியர் கழகம்.

(CS 22296)1-6

## மரண அறிவித்தல்



### சுப்பிரமணியம் வயிரவநாதன்

கருகம்பனையை பிறப்பிடமாகவும்", ஆதி மயிலிட்டியை (சாந்த சந்தி) வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் வயிரவநாதன் நேற்று (18.12.2022) ஞாயிற்றுக்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் அன்னப்பிள்ளை தம்பதியரின் மகனும், காலஞ்சென்ற சங்கரப்பிள்ளை மற்றும் சின்னத்தங்கம் தம்பதியரின் மருமகனும், புவனேஸ்வரியின் பாசமிகு கணவரும், கல்யாணி, பார்த்திபன், சிவரதன், தயாளன், கலைவாணி ஆகியோரின் பாசமிகு தந்தையும், ரூபகரன், உமா, அம்ருதா, ராதிகா, செல்வபவன் ஆகியோரின் மாமனாரும், அமரர் தவபாலசிங்கம், அமரர் தனபாலசிங்கம், பவளராணி, புஸ்பராணி, நளினராணி, சிவபாதசுந்தரம் ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.

தொ.பே:076 5357 537

(CS 22299)1-6

## மரண அறிவித்தல்

### சின்னத்துரை செந்திநாதன்

(முன்னாள் மருதனார்மடம், சுன்னாகம் சந்தை வியாபாரி, தேங்காய் செந்தி)

தோற்றம் : 17.05.1939 மறைவு : 18.12.2022



சபாபதிப்பிள்ளை வீதி, உடுவில் கிழக்கை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை செந்திநாதன் நேற்று (18.12. 2022) ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் சின்னத்துரை - பூமணி தம்பதியரின் மூத்த மகனும், கந்தையா வள்ளியம்மை தம்பதியரின் மருமகனும், தங்கராசலட்சுமியின் (சின்னக்கிளி) அன்புக் கணவரும், செல்வராசன் (அப்பன்- சாரதி கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம்-யாழ். மாவட்டம்), டினேஸ்குமார் (பிராந்திய மேற்பார்வையாளர் NIPPON Plastic) ஆகியோரின் தந்தையும், ஷோபநிதி (OMS Foundation), தர்ஷனா (தாதிய உத்தியோகத்தர்) ஆகியோரின் மாமனாரும், ஜனுஸ்திகா (வேம்படி மகளிர் கல்லூரி), ஆத்மிகா, ஆர்னிகா ஆகியோரின் பேரனும், அமரர் செவ்வந்திநாதன், அமரர் பஞ்சநாதன், சரஸ்வதி ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.12.2022) திங்கட்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பூவோடை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சபாபதிப்பிள்ளை வீதி,
உடுவில் கிழக்கு,
சுன்னாகம்.

தகவல்:
குடும்பத்தினர்.
077 986 3403
077 844 9933

(CS 22298)1-6

## மரண அறிவித்தல்

### இரட்ணேஸ்வர ஐயர் பாலேந்திரசர்மா

(ஓய்வுநிலை மின்சார சபை உத்தியோகத்தர்)

தோற்றம் : 13.11.1933 மறைவு : 17.12.2022



நயினாதீவை பூர்வீகமாகவும் கல்வியங்காட்டை வதிவிடமாகவும் கொண்ட இரட்ணேஸ்வர ஐயர் பாலேந்திரசர்மா (ஓய்வுநிலை மின்சார சபை உத்தியோகத்தர்) கடந்த (17.12.2022) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இரட்ணேஷ்வர ஐயர் நாகரத்தினம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான நவாலி சோமசுந்தரக் குருக்கள் புவனேஸ்வரியம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், மீனாட்சி அம்மா (அம்பிகை) அவர்களின் பாசமிகு கணவரும், பிரபரூடா, அமரர் மோகனரஞ்சன், அமரர் மதுமதி, பிரதீபன் ஆகியோரின் அன்புத் தந்தையும், வசந்தராசா, மலைமகள், பாலசந்திரன், காயத்திரி ஆகியோரின் மாமனாரும், சவிதா, வினோத், வதனன், மீனா கஸ்தூரி, பிரகாஷ் வானிஜன், மதுஜினி, நேத்ரா, நயன் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (20.12.2022) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, காலை 8.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

மடம் ஒழுங்கை, கல்வியங்காடு.
077 246 3032

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 22301)1-6

## மரண அறிவித்தல்

தோற்றம் 24 . 04 . 1932



மறைவு 14 . 12 . 2022

### திருமதி மகாதேவி பத்மநாதன்

(ஓய்வுநிலை ஆசிரியை, யூனியன் கல்லூரி, தெல்லிப்பழை.)

மலேசியாவைப் பிறப்பிடமாகவும், யார்வத்தை கொல்லங்கலட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மகாதேவி பத்மநாதன் (புனிதக்கா) 14.12.2022 புதன்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற இராசையா சின்னத்தங்கம் அவர்களின் அருமை மகளும், காலஞ்சென்ற நாகரட்ணம் தங்கமுத்து அவர்களின் மருமகளும், காலஞ்சென்ற திரு.பத்மநாதன் (J.P இளைப்பாறிய கணக்காளர் C.T.B) அவர்களின் அன்பு மனைவியும், Dr.சேந்தன் (நியூசிலாந்து), ஜெயந்தி (அவுஸ்திரேலியா) ஆகியோரின் பாசமிகு தாயாரும், கீதா (நியூசிலாந்து), அவர்களின் அன்பு மாமியாரும், துஷ்யந்தனின் அன்புப் பேர்த்தியும், திருமதி நாகேஸ்வரி மகேசன் (ஓய்வுநிலை மருந்தாளர்) அவர்களின் பாசமிகு சகோதரியும், Dr.மகேசனின் அன்பு மைத்துனியும், தயாளினி, தீனதயாளன், தயாகரன் ஆகியோரின் அருமை பெரியம்மாவும், நிமலன், அனுராதா, தனுசா ஆகியோரின் அன்பு மாமியும், பிரணன், ஆரணன், அவதாரணன் ஆகியோரின் அன்புப் பெரிய பாட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (20.12.2022) செவ்வாய்க்கிழமை முற்பகல் 09.00 மணியளவில் உடுவில் கிழக்கில் உள்ள தற்காலிக வதிவிடத்தில் நடைபெற்று, பூதவுடல் கீரிமலை செம்பொன்வாய்க்காலில் தகனக்கிரியைகள் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

பெரிய மதவடி, உடுவில் கிழக்கு, சுன்னாகம்.
T.P:075 358 2565

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 22300) 1/6

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழத்துச் சிதம்பரத்தில்

# திருவெம்பாவை உற்சவத்தை வழமைபோன்று நடத்துங்கள்

## சிவனடியார்கள் நேற்று கவனவீர்ப்பு



யாழ்ப்பாணம், டிசெ. 19

காரைநகர் ஈழத்துச் சிதம்பரத்தில் திருவம்பாவை உற்சவத்தை வழமைபோல் சிறப்பாக நடத்தக் கோரி காரைநகரில் நேற்றுக் கவனவீர்ப்புப் போராட்டம் சிவனடியார்களால் முன்னெடுக்கப்பட்டது.

காரைநகர் பிரதான வீதியிலிருந்து காரைநகர் ஈழத்து சிதம்பர வீதியினூடாக ஊர்வலம் ஆலயத்தை நேற்றுமாலை சென்றடைந்தது.

காரைநகர் ஈழத்து சிதம்பரத்தில் கொரோனாப் பெருந்தொற்றுக் காரணமாக திருவெம்பாவை உற்சவம் சிறப்பாக நடைபெறவில்லை. இந்த ஆண்டு எந்தவொரு இடரும் இல்லாமையால், திருவெம்பாவை உற்சவத்தில் கலந்து கொள்ள புலம்பெயர் தேசங்களிலிருந்து பலர் வருகை தருவதற்கு விமான முற்பதிவுகளைக்கூட மேற்கொண்டிருந்தனர்.

திருவெம்பாவை உற்சவத்தை நடத்தாமல் இருப்பதற்காக, ஆலயத்தை பாலஸ்தாபனம் செய்வதற்கு நிர்வாகத்தால் முயற்சி எடுக்கப்பட்டது. திருவிழா உபயகாரர்களால் ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் வழக்கு தொடுக்கப்பட்டதன் அடிப்படையில் பாலஸ்தாபனம் செய்ய இடைக்காலத் தடை உத்தரவு வழங்கப்பட்டது.

நீதிமன்றத் தீர்ப்பை அடுத்து திருவெம்பாவை உற்சவம் வழமைபோன்று நடைபெறும் என்று எதிர்பார்க்கப்பட்ட நிலையில், கொரோனா காலத்தில் நடத்தியது போல காலை 5 மணி தொடக்கம் 7 மணிக்குள் திருவிழாவை நடத்துவதற்கு ஆலய நிர்வாகத்தினர் முயற்சி எடுத்தனர். அதற்கு எதிர்ப்பு தெரிவித்தும் திருவம்பாவை உற்சவத்தை வழமைபோல் சிறப்பாக முன்னெடுப்பதற்கு ஆலய நிர்வாகம் ஒத்துழைப்பு வழங்கவேண்டும் எனக் கோரியே நேற்றுப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

மானிப்பாய், காரைநகர் பிரதான வீதியில் கற்பூரம் எரித்து தேங்காய் உடைத்து காரைநகர் ஈழத்து சிதம்பரத்துக்கு ஊர்வலமாக சிவனடியார்கள் சென்றனர்.


'ஆலய நிர்வாகமே உற்சவத்தை வழமைபோல் காலை 6 மணி முதல் ஒரு மணி வரை நடத்துங்கள்!', 'அடியவர்களின் கோரிக்கைக்கு அமைவாக திருவெம்பாவை உற்சவத்தை சிறப்புற நடத்துங்கள்!', 'பக்த கோடிகளின் கேள்விக்கு என்ன பதில்?', 'அனைவரும் இணைந்து திருவெம்பாவை உற்சவத்தை நடத்தி அதன் பின்பு பாலஸ்தாபனத்தை நிகழ்த்துவோம்!', 'தில்லைக்கூத்தன் சந்நிதியின் திருவம்பாவை காண இந்த அவலமா?', 'திருவெம்பாவை உற்சவம் சம்பந்தமாக நிர்வாகிகளின் பதில் என்ன?' என்றவாறான பதாகைகளைத் தாங்கியவாறு ஊர்வலமாகச் சென்று ஆலயத்தை அடைந்தனர். இந்த பதாகைகளை ஏந்தியவாறு நடந்து சென்றனர்.

முன்னைய வருடங்களில் நடைபெறுவது போன்று நடைபெறுவதற்கு ஆலய நம்பிக்கை பொறுப்பாளர்களை அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம் என்று எழுதப்பட்ட மனுவில் சுமார் நூற்றுக்கும் மேற்பட்ட சிவனடியார்கள் இணைந்து கையெழுத்திட்டு கையளிக்க முயன்றனர். இதன்போது ஆலயத்தில் எவருமே இல்லை என்பதால், ஆலய முன்றிலில் மனுவை சிவனடியார்கள் வைத்து விட்டுச் சென்றனர்.

(அ-ஒ-27-125)

இராணுவத்தால் காணாமல் ஆக்கப்பட்ட

# மகனைத் தேடியலைந்த தாயார் உயிரிழப்பு



யாழ்ப்பாணம், டிசெ. 19

கடந்த 1996 ஆம் ஆண்டு புத்தூர் கிழக்கு, ஊறணி பகுதியில் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்ட மகனைத் தேடியலைந்த தாய் ஒருவர் நேற்றுமுன்தினம் உயிரிழந்துள்ளார்.

அதேயிடத்தைச் சேர்ந்த செல்வன் சோதி என்பவரே உயிரிழந்தவராவார்.

தனது மகன் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்ட பின்னர், அவரைத் தேடி பல இடங்களில் அலைந்துள்ளதுடன் பல்வேறு போராட்டங்களிலும் கலந்துகொண்டுள்ளார். இறுதி வரையில் அவரது மகனைக் காணாமல் அவர் உயிரிழந்துள்ளார்.

(அ-ஒ-27)

# நகைத் திருட்டு: இருவர் கைது

யாழ்ப்பாணம், டிசெ. 19

ஆவரங்கால் கிழக்கு, புத்தூரில் வீடு புகுந்து ஐந்தே முக்கால் பவுண் தங்க நகைகளை திருடிய 23 மற்றும் 35 வயதுடைய இரண்டு சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக அச்சுவேலி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

கடந்த மாதம் வீட்டின், புகை கூடு வழியாக உள்நுழைந்த திருடர்கள் 9 இலட்சத்து 20 ஆயிரம் ரூபா பெறுமதியான நகைகளை திருடிச் சென்றிருந்தனர். சம்பவம் தொடர்பில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

அச்சுவேலி பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்திருந்தனர். நகைகளை விற்ற பற்றுச்சீட்டுடன் ஒருவர் நடமாடுவது தொடர்பில் கிடைத்த தகவலுக்கு அமைவாக அவரை பொலிஸார் விசாரணைக்கு உட்படுத்தினர். அத்துடன் விற்பனை செய்வதற்கு உடந்தையாகச் செயற்பட்ட ஒருவரையும் பொலிஸார் கைது செய்தனர். திருடப்பட்ட நகைகள் உருக்கப்பட்ட நிலையில் மீட்கப்பட்டுள்ளன. (அ-ஒ-23)

### பவள...

தவிசாளர் வேழமாலிதன் தலைமையில் கிளிநொச்சி மாவட்ட கூட்டுறவாளர் மண்டபத்தில் நடைபெற்றது.

நிகழ்வில் தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை.சோ.சேனாதிராசா, நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன், நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் ஈ.சரவணபவன், பிரதேசசபைத் தவிசாளர்கள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (அ-ச-113)

### நல்லிணக்கம்,...

மனித உரிமைகள் பேரவையில் இலங்கை தொடர்பான தீர்மானம் கடந்த ஒக்ரோபரில் நிறைவேற்றப்பட்டது. குறித்த தீர்மானம் நிராகரிக்கப்படவேண்டுமென்று அவ்வேளையில் இலங்கை அழைப்பு விடுத்திருந்தது.

ஆயினும், மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களை செயற்படுத்த உதவுவதற்காக, 2023ஆம் ஆண்டுக்கான ஐ.நா.வின் பரிந்துரைக்கப்பட்ட வரவு - செலவுத் திட்டத்தின் ஒரு பகுதியாக இலங்கைக்கான நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

நிர்வாக மற்றும் வரவு - செலவு விடயங்களுக்குப் பொறுப்பான ஐ.நா. பொதுச் சபையின் ஐந்தாவது குழுவில் இந்த வாரம் இது குறித்து விவாதிக்கப்பட்டது.

இந்த நிலையில், 'சம்பந்தப்பட்ட நாட்டால் நிராகரிக்கப்பட்ட தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவதற்கு ஐக்கிய நாடுகள் சபையின் வரையறுக்கப்பட்ட வரவு - செலவுத் திட்டத்தில் இருந்து நிதி ஒதுக்கப்படுவதை அங்கீகரிக்கமுடியாது' என்று கூட்டத்தில் இலங்கையின் பிரதிநிதி எதிர்ப்பு தெரிவித்துள்ளார். (அ-ஒ-இ)

### படகில்...

ஆண் ஒருவரும், 2 வயதான குழந்தையொன்றும் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளதாக மருத்துவமனை வட்டாரங்கள் தகவல் வெளியிட்டன.

மியான்மரைச் சேர்ந்த 104 ரோஹிங்ய அகதிகள் இந்தோனேஷியா நோக்கிச் சென்று கொண்டிருந்தபோது, வடமராட்சி கடற்பரப்புக்கு அண்மித்து அவர்களது படகு பழுதடைந்தது. அவர்கள் படகிலிருந்து அபாயக் குரல் எழுப்பியதையடுத்து, அந்தப் பகுதியில் மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த வடமராட்சியைச் சேர்ந்த மீனவர் அவதானித்து கடற்படையினருக்கு தகவல் வழங்கினார்.

அதற்கு அமைவாக படகு மீட்கப்பட்டு காங்கேசன்துறை கடற்படை முகாமுக்கு கொண்டுசெல்லப்பட்டது. அவர்கள் அங்கு தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

(அ-ஒ-27-125)

### 150 பேருடன்...

அவர்களை வடமராட்சி மீனவர்கள் அவதானித்து கடற்படையினருக்கு தகவல் வழங்கி மீட்டனர். அவர்கள் தற்போது காங்கேசன்துறையில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

அவர்கள் பங்களாதேஷிலிருந்து இந்தோனேஷியாவுக்கு இரண்டு படகுகளில் புறப்பட்டதாகத் தெரிவித்துள்ளனர்.

சுமார் ஒரு மாதத்துக்கு முன்னர் தமது பயணம் ஆரம்பமானதாகவும், ஆனால், ஒரு வார காலத்துக்கு மாத்திரமே ஒழுங்கான உணவு கிடைத்ததாகவும் அவர்கள் குறிப்பிடுகின்றனர்.

அத்துடன் தம்மோடு பயணித்த மற்றொரு படகு கடலில் மூழ்கியதாக அவர்கள் தெரிவித்துள்ளனர். ஆனால், அது தொடர்பான உண்மைத் தன்மையை உறுதிப்படுத்த முடியவில்லை. (அ-ஒ-5)

### நீர்நிலைக்கு...

போராடி வருகின்றன. இந்தச் சம்பவம் நேற்று மாலை நடைபெற்றுள்ளது.

மாடுகள் நேற்று மாலை நீர் அருந்துவதற்காக சென்றுள்ளன. அவை நீர் அருந்தி சிறிது நேரத்தில் படபடவென சரிந்து வீழ்ந்து உயிரிழந்துள்ளன. சுமார் 15 மாடுகள் இவ்வாறு அதேயிடத்தில் உயிரிழந்துள்ளன. மேலும் சில மாடுகள் உயிருக்குப் போராடி வருவதுடன் சில மாடுகள் காணாமற்போயுமுள்ளன.

சம்பவம் தொடர்பாக மாடுகளின் உரிமையாளர் ஈச்சங்குளம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

மாடுகள் அருந்திய நீரில் விஷத்தைக் கலந்ததாகச் சந்தேகிக்கப்படும் நபர் தலைமறைவாகியுள்ளார். (அ-ஒ-110)

### 45 ஆயிரம்...

மற்றொரு தொகுதி போத்தலில் அடைக்கப்பட்ட பனங்கள் பிரிட்டனுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது.

மேலும், பனை அபிவிருத்திச் சபையானது பனை சார்ந்த உற்பத்திகளான பனங்கட்டி, பனாட்டு, பனங்களி, ஒடியல்மா, புளுக்கொடியல் போன்ற உற்பத்திகளை ஏற்றுமதி செய்வதற்குரிய வசதிகளை ஏற்றுமதியாளர்களுக்கு வழிவகுத்து வருகின்றது.

(அ-ஒ-இ)

### பல்கலைக்கழகப்...

அவர்கள் தேர்ந்தெடுத்த துறை மற்றும் பல்கலைக்கழகத்தில் பதிவு செய்து கொள்ள முடியுமெனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ-ஒ-இ)

### கடும்...

மழையே இடைக்கிடையே பெய்வதற்கான வாய்ப்புக்கள் இருக்கின்றன. நாளை மறுதினம் புதன்கிழமைக்குப் பின்னரே வடக்கு மாகாணத்தில் கனமழைக்கான வாய்ப்புக்கள் இருக்கலாம் என்று வானிலை எதிர்வுகூறல்களில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை- கிழக்கு மாகாணத்தில் இன்று தொடக்கம் கனமழைக்கான வாய்ப்பு காணப்படுகின்றது. (அ-ஒ-5)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

### வெதுப்பக...

யாழ்ப்பாணத்தில் இயங்கும் பேக்கரி உரிமையாளர் சங்கம் மற்றும் யாழ். மாவட்ட வெதுப்பக உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம் ஆகிய இரு அமைப்புகளும் இணைந்து இன்று மு.ப. 11 மணிக்கு, பேக்கரி உரிமையாளர் சங்க மண்டபத்தில் கலந்துரையாடவுள்ளன.

யாழ்ப்பாணத்திலுள்ள வெதுப்பகங்களுக்கு கோதுமை மா முன்னர் வழங்கப்பட்ட விலையை விட ஒரு கிலோவுக்கு 20 ரூபா குறைவாக வழங்கப்படுவதால், வெதுப்பக உற்பத்திப் பொருள்களின் விலையைக் குறைப்பது தொடர்பில் ஆராயப்படவுள்ளது.

தேசிய ரீதியில் பாணின் விலை 10 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-ஓ-5)


## வேலைவாய்ப்பு

எமது நிறுவனத்திற்கு கீழ்வரும் வெற்றிடங்களுக்கு தகுதியான வர்களிடமிருந்து விண்ணப்பங்கள் எதிர்பார்க்கப் படுகின்றன.

- சாரதி (Driver)
- வெல்டர் (Welder)
- சுத்திகரிப்பாளர் (Cleaner)

மேற்படி வெற்றிடங்களுக்கு தகுதியானவர்கள் இன்று (19.12.2022) திங்கட்கிழமை, மு.ப. 9.00 - 12.00 மணிவரை நடைபெறும் நேர்முகத் தேர்விற்கு சமுகம் தரவும்.

முன் அனுபவம் மேலதிக தகைமையாகக் கொள்ளப்படும்.

உதயன்

இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

## வேலைவாய்ப்பு



யாழில் இயங்கிவரும் எமது நிறுவனத்திற்கு கீழ்வரும் வெற்றிடங்களுக்கு தகுதியானவர்களிட மிருந்து விண்ணப்பங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன.

1). வரவேற்பாளர்கள் (Receptionist)
2). சந்தைப்படுத்தல் உத்தியோகத்தர்கள் (Marketing Executive)

ஆர்வமுள்ளவர்கள் இன்று (19.12.2022) திங்கட்கிழமை முற்பகல் 10.00- பிற்பகல் 02.00 மணிவரை நடைபெறும் நேர்முகத் தேர்விற்கு சமுகம் தரவும்.

உதயன் பணிமனை

இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கோயிலாக்கண்டி பகுதியில்
40 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

**நிலப்பரப்பு**

- A32 பிரதான வீதியில் இருந்து 600M தூரம்
- 18 அடி பாதையுடன் 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- A32 பிரதான வீதியில் இருந்து இருவழிப் பாதைகள் உள்ளன.
- நெய்தல் பீச்சுக்கு (Beach) அருகாமையில் உள்ளது.
- கோயிலாக்கண்டியில் இருந்து யாழ். நகரத்திற்கும், சாவகச்சேரி நகரத்திற்கும் அரச, தனியார் பஸ் போக்குவரத்து சேவை உள்ளது.
- இக் காணியின் தெற்கு எல்லை கடற்கரை (பீச்) நல்ல தண்ணீர் ஊற்றுச் சூழல் (கட்டுக் கிணறும் உள்ளது)
- ஒரு பரப்பின் விலை 675000 ரூபாய் மட்டுமே.

தரகர் தேவையில்லை

பார்வையிடும் நேரம்:-

காலை 6 மணி தொடக்கம் மாலை 6 மணிவரை.

தொடர்பு:- ஜெயம்

077 8147 389
077 9865 457

## பெண் வேலையாள்கள் தேவை

அளவெட்டியில் இயங்கும்
மிக்சர் கொம்பனி ஒன்றிற்கு பொதி செய்தல்
வேலைக்கு பெண் வேலையாள்கள் தேவை.
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

077 069 0333

## வீடு வாடகைக்கு தேவை

யாழ். நகரை அண்டிய பகுதியில் வீடு வாடகைக்கு தேவை. (cs48188) (2.6)

077 986 6032

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் சாவகச்சேரிப் பகுதியில்
20 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

**நிலப்பரப்பு**

- சாவகச்சேரி மகளிர் கல்லூரி பிரதான வீதியுடன். 18 அடி பாதையுடன் 2 பரப்பாகவும், 3 பரப்பாகவும், 4 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- பெரிய நாகதம்பிரான் கோயிலுக்கு அருகாமையில் உள்ளது.
- A-9 பிரதான வீதியில் இருந்து 700 M தூரம்.
- காய்க்கும் தென்னைகள் 112 உள்ளன.
- குடிதண்ணீர் கட்டுக் கிணற்றுடன் சிறிய வீடும் உள்ளது.
- நீர் பாய்ச்சும் வசதிகள் உள்ளன. (பைப் லைனிங்)
- விலை நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

**தரகர் தேவையில்லை.**

பார்வையிடும் நேரம் :


காலை 6 மணி தொடக்கம் மாலை 6 மணிவரை

தொடர்பு:- ஜெயம்

077 98 65 457
077 81 47 389


## மரண அறிவித்தல்

தோற்றம்: 28 . 04 . 1946



மறைவு: 16 . 12 . 2022

### இராசசிங்கம் குலசிங்கம்

(ஓய்வுபெற்ற அதிபர் - யா / ஊரெழு கணேச வித்தியாலயம்,
பொருளாளர் - கோண்டாவில் கிழக்கு, ஆசிமட அரசடி விநாயகர் ஆலயம்)

கோண்டாவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இராசசிங்கம் குலசிங்கம் கடந்த (16.12.2022) வெள்ளிக்கிழமை ஆசிமட அரசடி விநாயகர் அடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற இராசசிங்கம் - மதியாபரணம் தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற நாகரத்தினம் - தங்கரத்தினம் தம்பதியரின் அன்பு மருமகனும், மனோன்மணி (ஓய்வுபெற்ற ஆசிரியர், யா/ கோண்டாவில் சி.சி.த.க.பா) இன் அன்புக் கணவரும், செந்தூரன் (அமெரிக்கா), பிரணாளினி (முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர், கல்வி அமைச்சு, வடக்கு மாகாணம்) ஆகியோரின் அன்புத் தந்தையும், யாழினி (அமெரிக்கா), குமாரசூரியர் (மணிவண்ணன் - முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர், கிராம அபிவிருத்தித் திணைக்களம், வடக்கு மாகாணம்) ஆகியோரின் அன்பு மாமனாரும், சுபனிதா, ஸ்ரீயா (அமெரிக்கா) ஆகியோரின் பாசமிகு பேரனும், காலஞ்சென்ற குமாரசிங்கம் மற்றும் தனரஞ்சிதமணி, மனோரஞ்சிதமணி ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.12.2022) திங்கட்கிழமை பி.ப 1.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைகள் கோண்டாவில் கிழக்கு, கட்டையாலடி இந்து மயானத்தில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

"இரஞ்சிதவாசா"
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்.
தொடர்புகளுக்கு:
செந்தூரன் (மகன் - 077 342 5145)
குமாரசூரியர் (மணிவண்ணன்-மருமகன் - 077 652 8814)

தகவல்:
குடும்பத்தினர்

(CS 48185) (2-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 19.12.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.